வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P.1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com    மலர் : 06    11.03.2025 செவ்வாய்க்கிழமை    இதழ் : 71    பக்கங்கள் : 12



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390. ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் யாழில் மட்டுமே கூட்டாக போட்டி

## ஏனைய இடங்களில் பங்காளிகளுடன் போட்டி என்கிறார் செல்வம் எம்.பி.

மன்னார், மார்ச் 11

உளளூராட்சி மன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சரவணபவன் மற்றும் சந்தி ரகுமார் ஆகியோரின் கட்சிகளுடன் இணைந்து போட்டியிட உள்ளதோடு வடக்கு - கிழக்கில் ஏனைய இடங்களில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி அங்கத்துவக் கட்சிகளுடன் மாத்திரம் இணைந்து போட்டியிட உள்ளதாக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ரெலோ இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.



மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடம்பெற உள்ள உள்ளூ ராட்சிமன்றத் 11

## தபால் தொழிற்சங்கங்கள் மார்ச் 18 வேலைநிறுத்தம்

கொழும்பு, மார்ச் 11

தபால் தொழிற்சங்கங்கள் எதிர்வரும் மார்ச் 18 ஆம் திகதி பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளன.

தபால் திணைக்களத்தின் நீண்ட கால பிரச்னைக ளுக்கு அதிகாரிகள் தீர்வு காணத் தவறியதையடுத்து, அனைத்துத் தபால் தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளன.

இந்தத் தகவலை தபால் மற்றும் தொலைத் தொடர்பு தொழிற்சங்கத்தின் செயலாளர் மஞ்சுளா ஜயசுந்த தெரிவித்தார். 11

## ரணில் உள்ளிட்டோருக்கு எதிரான மனு; விசாரணையிலிருந்து நீதியரசர் விலகல்

கொழும்பு, மார்ச் 11

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட் டோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உயர் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதியரசர் குழாமின் உறுப்பினரான நீதியரசர் மேனகா விஜயசுந்தர நேற்று குறித்த விசாரணையிலிருந்து விலகுவதாக அறிவித் துள்ளார். 11

## அரச வைத்தியசாலைகளுக்கு தட்டுப்பாடில்லாது மருந்துகள்

### சுகாதார அமைச்சர் நளிந்த

கொழும்பு, மார்ச் 11

அரச வைத்தியசாலைகளுக்கு எவ்வித தட்டுப்பாடு மின்றி மருந்துகளை தொடர்ச்சியாக வழங்க உள்ளதாக சுகாதார மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் மருந்து விநியோகம் தொடர் பில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்-

சுகாதார மற்றும் மருந்து விநியோகம் என்பன இந்நாட்டு மக்களின் வாழ்க்கையுடன் 11

## அர்ச்சுனா எம்.பிக்கு சபையில் எதிர்ப்பு!

கொழும்பு, மார்ச் 11

இஸ்லாமியர்களின் திருமண சட்டம் தொடர் பில் பாராளுமன்ற உறுப் பினர் அர்ச்சுனா தெரி வித்த கருத்து தமக்கு வருத் தமளிப்பதாக பாராளு மன்ற உறுப்பினர் எம். எஸ். நளீம் தெரிவித்துள் ளார்.

பெண்கள் தொடர்பி லும் விவாகம், விவகாரத்து போன்ற விடயங் 11

## கொழும்பிலுள்ள தேசிய பாடசாலைகளில் தமிழ் பிரிவு வகுப்புகளை அதிகரியுங்கள்



### மனோ கணேசன் எம்.பி கோரிக்கை

கொழும்பு, மார்ச் 11

கொழும்பிலுள்ள முக் கியமான தேசிய பாடசா லைகளில் தமிழ்ப் பிரிவிற் கான வகுப்புகள் குறைக் கப்பட்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

றோயல் கல்லூரி, டி. எஸ். சேனநாயக்க கல்லூரி, இசிப்பதான கல்லூரி ஆகியவற்றில் தமிழ்ப் பிரிவிற்கான வகுப்புகள் குறைக்கப்பட்டு வருவ தாக தரவுகளுடன் நேற் றைய குழுநிலை விவாதத் தில் கலந்து கொண்டு மனோ கணேசன் முன்வைத்திருந்தார்.

இந்த விடயத்தில் பாரபட்சம் 11

## தமிழ்க் கட்சிகள் ஒற்றுமைப்படாவிடின் வடக்கில் தெற்கு கட்சிகள் பலம்பெறும்

கொழும்பு, மார்ச் 11

தமிழ் மக்களும் தமிழ் அரசியல் கட்சிகளும் இனியும் ஒற்றுமையாக இல்லாவிட்டால் வடக்கில் தென்னிலங்கைக் கட்சிகள் பலம் பெறும் நிலை ஏற்படும் என பேராசிரியர் சர்வேஸ்வரன் எச்சரித்துள்ளார்.

டி.பி.எஸ். ஜெயராஜ் எழுதிய அரசியல் அதிகார வர்க்கத்தின் மாற்றம் நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை 11

## எந்த மதத்தையும் நிந்திக்கவில்லை

### அர்ச்சுனா எம்.பி. பதில்

கொழும்பு, மார்ச் 11

பொதுவாக மக்களிடம் இருந்து வந்த கோரிக்கை களையே தாம் பாராளுமன்றில் முன்வைத்ததாக பாராளு மன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்தார்.

இஸ்லாமிய மதத்தில் மாற்றங்களை ஏற்படுத்த எவரும் முயற்சிக்கவில்லை என அர்ச்சுனா சுட்டிக்காட்டினார்.

நேற்றைய குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர்-

சிறுபிள்ளைகளையும், பெண்களையும் 11

## ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி மன்னாரில் நேற்று கட்டுப்பணம்

மன்னார், மார்ச் 11

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிட ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி நேற்று மதியம் மாவட்ட தேர்தல் பணிமனை யில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் செயலாளரும் 11

## புலமைப்பரிசில் பரீட்சை குறித்து உறுதியான தீர்மானம் வேண்டும்

### சபையில் ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

கொழும்பு, மார்ச் 11

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் மாற்றம் ஏற்படுத்துவதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆனால் அது குறித்து தற்போது ஏதும் குறிப்பிடப்படவில்லை. பிள்ளைகளின் இளம்பராயத்தை அனுபவிப்பதற்கு புலமைப்பரிசில் பரீட்சைக்கான தயார்படுத்தல்கள் தடையாக காணப்படுகிறது. ஆகவே இவ்விடயத்தில் அரசாங்கம் கொள்கை ரீதியில் உறுதியான தீர்மானத்தை எடுக்க வேண்டும் 11

## த. தே. முன்னணியுடனும் பேச்சு; முடிவு இன்னும் எடுக்கவில்லை!

### தமிழ்த் தேசிய பசுமை இயக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட தலைவர் களும் கூட்டணி தொடர்பில் எம்முடன் பேச்சு நடத்தி யுள்ளனர். எனினும், உத்தியோகபூர்வ முடிவு எதுவும் இன்னமும் எடுக்கவில்லை என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் அறிவித்துள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடனான கூட்டணி பேச்சு குறித்து தமிழ்த் தேசிய பசுமை 11

பட்டலந்த சித்திரவதை முகாம்

## விசாரணைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்தி சி.ஐ.டி.யில் முறைப்பாடு!

கொழும்பு, மார்ச் 11

பட்டலந்த சித்திரவதை முகாம் தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்தி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் வீண்விரயத்துக்கு எதிரான பிரஜைகள் அமைப்பினால் இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதுடன் இது தொடர்பில் 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# முதலீட்டை கைவிட்ட அதானி; ஐக்கிய மக்கள் சக்தி கவலை

## அரசின் பொருத்தமற்ற நடத்தை என சாடல்

கொழும்பு, மார்ச் 11

**இலங்கை பெறும் முதலீடுகளின் நிலை தொடர்பில் முக்கிய எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கவலை வெளியிட்டுள்ளது.**



முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கும் தக்க வைத்து கொள்வதற்கும் நாடு விவேகமான முடிவுகளை எடுக்கவேண்டும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.


அரசாங்கத்தின் பொருத்தமற்ற நடத்தை மற்றும் திட்டங்கள் குறித்து ஆர்வம் இல்லாத காரணத்தால், இந்திய கூட்டு நிறுவனமான அதானி குழுமம் இலங்கையில் தனது முன்மொழியப்பட்ட திட்டங்களை கைவிட்டதாக அவர் தெரிவித்தார்.

அதானி குழுமம் திட்டத்திலிருந்து விலக முடிவு செய்வதற்கு முன்பு அரசாங்கம் பேச்சு நடத்தியிருக்கவேண்டும் என்றும், நாட்டுக்கு கிடைக்கும் முதலீடுகளைப் பாதுகாக்க இது போன்ற விழிப்புணர்வு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அவசியம் எனவும் அவர் வலியுறுத்தினார்.

"இந்தியாவின் அதானி குழுமத்துடனான ஒப்பந்தங்களைத் திரும்பப் பெறுவதன் மூலம், இலங்கை மற்ற முதலீட்டாளர்களுக்கான அணுகலைத் தடுத்துள்ளது" என்று அவர் கூறினார்.

அதானி குழுமத்திற்கு மேலதிகமாக, பல சர்வதேச முதலீட்டாளர்கள் அண்மைய காலங்களில் நாட்டை விட்டு வெளியேறிவிட்டதாக திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சாட்டினார். (அ)

# ஐ. நா. அலுவகம் முன்பாக நேற்று ரோகிங்யா அகதிகள் போராட்டம்




கொழும்பு, மார்ச் 11

இலங்கையில் உள்ள ரோகிங்யா அகதிகள் நேற்று கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

உணவு, வீடு போன்ற நிரந்தர மற்றும் உடனடி உதவிகளை கோரி அவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

கடலில் இருந்து மீட்கப்பட்டோம். ஆனால், தரையில் உயிரிழக்க விடப்பட்டுள்ளோம் என தெரிவிக்கும் பதாகைள் உட்பட தங்கள் துயரங்களை தெரிவிக்கும் பல்வேறு பதாதைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர்.

# வவுனியாவில் முன்னணி கட்டுப்பணம்

வவுனியா, மார்ச் 11

வவுனியா மாநகர சபை உட்பட 4 சபைகளிலும் போட்டியிட தமிழ் தேசிய மக்கள் முன்னணி நேற்று வவுனியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி பணிமனையில் கட்டுப்பணம் செலுத்தியது.

இதன்படி, வவுனியா மாநகர சபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வெண்கல செட்டிக்குளம் பிரதேச சபை ஆகிய 4 உள்ளூராட்சி மன்றங்களிலும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தனித்து போட்டியிடவுள்ளது.

# கைவிடப்பட்ட குழந்தை மீட்பு

கொழும்பு, மார்ச் 11

அம்பலாங்கொடை, தேவகொட பிரதேசத்தில் வீதியில் கைவிடப்பட்ட நிலையில் குழந்தை ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

2 மாத ஆண் குழந்தை ஒன்றே இவ்வாறு மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். மீட்கப்பட்ட பலப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளது. (அ)

# பெருந்தோட்ட பாடசாலைகளில் பட்டதாரி ஆசிரியர் எண்ணிக்கையை அதிகரிக்குக

கொழும்பு, மார்ச் 11

மலையகப் பெருந்தோட்ட பாடசாலைகளில் பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் வேலு சாமி இராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.


மலையகத்திலிருந்து பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாகவும் நேற்றைய குழு நிலை விவாதத்தில் அவர் சுட்டிக் காட்டினார்.

அரசாங்கத்தை எந்த வகையிலும் குற்றஞ்சாட்ட முடியாது எனவும் இதுவே தேசிய மக்கள் சக்தியின் ஆரம்பம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அடுத்த வருட பாதீட்டின் போது தாம் குறிப்பிட்டவைகள் உள்வாங்கப்படவில்லை எனில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படலாம் எனவும் இராதாகிருஷ்ணன் கூறினார். (அ)

# இரணைப்பாலை நீச்சல் தடாகத்தை நீச்சல் பயிற்சி மையமாக்கவேண்டும்

## முல்லை. துடுப்பாட்ட சங்க தலைவர் கோரிக்கை



முல்லைத்தீவு, மார்ச் 11

புதுக்குடியிருப்பு - இரணைப்பாலையில் பலரும் அறிந்த நீச்சல் தடாகம் ஒன்றுள்ளது. இது பாவனையின்றி காணப்படுகிறது. இந்த நீச்சல் தடாகத்தை மாவட்ட செயலகத்தின் அல்லது மாகண விளையாட்டுத் துறை பொறுப்பேற்று நீச்சல் பயிற்சி மையமாக மாற்ற வேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்ட துடுப்பாட்ட சங்கத் தலைவர் மருத்துவர் க. உதயசீலன் கோரிக்கை விடுத்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தால் நடத்தப்பட்ட "முல்லை பிறீமியர் லீக்" இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் பிரதம விருந்தினராக பங்கேற்ற இந்த நிகழ்வில் மருத்துவர் க. உதயசீலன் மேலும் தனது உரையில் தெரிவித்தவை வருமாறு,

முல்லைத்தீவு மாவட்டத்தில் இத்தகைய நீச்சல் தடாகம் அமைக்கப்பட வேண்டுமாயின் அது பெரும் பொருள் செலவை ஏற்படுத்தக் கூடும். அதனால், இருக்கக் கூடிய வளங்களை வினைத்திறனாக - குறிப்பாக மாணவ, மாணவியருக்கு நீச்சல் பயிற்சிகளை வழங்கக்கூடிய மையமாக மாற்றுவதற்கு மக்கள் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் முயற்சி செய்ய வேண்டும் - என்றார்.

குறித்த நீச்சல் தடாகம் போர் காலத்தில் வன்னியில் அமைக்கப்பட்டிருந்தது. போருக்கு பின்னர் அந்த நீச்சல் தடாகத்தை பார்வையிட மக்கள் அனுமதிக்கப்பட்டனர். பின்னர் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தை திருடரின் கையிலிருந்து மீட்டெடுக்கவேண்டும்

## கல்வித்துறை அதிகாரிகளிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 11

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தை திருடர்களின் கைகளில் இருந்து மீட்டெடுத்து மீளவும் மாகாண கல்விப் பணிப்பாளரின் ஆளுகைக்கு உட்படுத்தி நிலையத்தின் கோட்பாட்டுக்கு அமைவாக- வடக்கு பிராந்திய கல்வி அபிவிருத்திக்காக இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று அந்த நிலையத்தின் நிறைவேற்று அதிகார செயல்குழு உறுப்பினரும் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளருமான பரா. கஜேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று முனதினம் ஞாயிற்றுக் கிழமை அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

பாரம்பரியம்மிக்க - பல தசாப்தங்களை கடந்து வடக்கு மாகாணத்தின் கல்வி அபிவிருத்தியில் மிகப்பெரும் பங்காற்றிக் கொண்டு - இணைந்து செயல்பட்டுக் கொண்டிருக்கும் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் இன்று அதன் சுயங்களை இழந்து கல்வி பின்னணியை விட்டு விலகி மாணவர் [illegible] பார நோக்கான நிறுவனமாக மாறிக்கொண்டு வருகிறது..

வட பிராந்தியத்தின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் கல்வி ஆர்வலர்கள் ஒருங்கிணைந்து 1968ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வெளிக்கள நிலையமானது அக்காலத்தில் நிலவிய கல்வி முறைக்கமைவாக பிராந்திய கல்விப் பணிப்பாளர்களுடைய ஆளுகைக்குள் உட்படுத்தப்பட்டு அவர்களுடைய பங்குபற்றுதலுடன் கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் 10 ஆம் திகதி வரைக்கும் இயங்கி வந்தது.

ஆனால், அதற்கு பின் இதன் நிலைமை என்ன? வடக்கு மாகாணத்தை பொறுத்த வரைக்கும் கல்வியே எங்கள் மூலதனம். ஆனால், இன்று அதில் ஊழல்வாதிகளாக காணப்படும் ஓய்வுநிலை கல்வியாளர்களும் ஒரு சில பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விரிவுரையாளர்களும் தனிப்பட்ட வருமாணனத்தை ஈட்டுவதற்காகவும், தனிப்பட்ட வருமானத்தை பெருக்குவதற்காகவும் வெளிக்கள நிலையத்தின் நிலையான வைப்புகளில் இருக்கும் பெருந்தொகை நிதியை தங்கள் இஷ்டத்துக்கு பயன்படுத்துவதற்குமாக இந்த நிறுவனத்தை மாகாண கல்வித் திணைக்கத்தின் ஆளுகையில் இருந்து வெளிப்படுத்தி தனியே இரகசியமாக அதனை இயக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

மாகாண கல்வித் திணைக்களம், மாகாண கல்வி அமைச்சு, ஆளுநர் செயலகம், பிரதம செயலாளர் மற்றும் மாவட்ட செயலாளர் ஆகியோர் இணைந்து இதனை ஒரு முடிவுக்கு கொண்டு வர வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் மேற்குறித்த அனைவருக்கும் எழுத்து மூலம் எங்களுடைய குற்றச்சட்டுகளை முன்வைத்துள்ளோம்.

இதனடிப்படையில் மாகாண கல்வி திணைக்களத்தின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த வெளிக்கள நிலையத்தை திருடர்களின் கைகளில் இருந்து மீட்டெடுத்து மீளவும் மாகாண கல்விப் பணிப்பாளரின் ஆளுகைக்கு உட்படுத்தி அதனை வெளிக்கள நிலையத்தின் கோட்பாட்டுக்கு அமைவாக வடக்கு பிராந்தியத்தின் கல்வி அபிவிருத்திக்காக இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
11.03.2025 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், மாசி 27

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## நாடும் வீடும்

தேசிய மக்கள் சக்தியின் அலை இப்போதும் குறையவில்லை - நாடு அநுரவோடு இருக்கட்டும் வீடு உங்களோடு இருக்கட்டும் என்றவாறு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்திருக்கிறார். அதற்கு இவ்வாறும் பொருள் கொள்ளலாம் பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தது பிரச்னையில்லை. ஏனெனில், நாட்டை அநுர சுத்தமாக வைத்திருக்கட்டும். ஆனால், வீட்டை நாங்கள் விரும்பியவாறு வைத்துக் கொள்வதற்கான ஆதரவைத் தாருங்கள்.

உள்ளூராட்சித் தேர்தலில் ஓர் அணியாகப் போட்டியிட வேண்டும் - அதன் மூலம் அனைத்து மக்களும் ஒரு நிலைப்பாட்டில் இருக்கின்றனர் என்பதைக் காண்பிக்க முடியும் என்னும் கருத்தை தமிழ்க் கட்சிகள் வழமைபோல் நிராகரித்து - எங்களுக்கு எவரும் ஆலோசனை கூறமுடியாது - அதனை நாங்கள் கேட்கப் போவதுமில்லை என்னும் மனோநிலையில் செயல்படுகின்றன. இதற்கிடையில் திருகோணமலை போன்ற பகுதிகளில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியே சுயேச்சைக் குழுக்களையும் நிறுத்துவதற்கும் முயற்சிக்கிறது. ஒரு கட்சியைச் சேர்ந்தவர்களே கட்சியாகவும் இன்னொருபுறம் சுயேச்சைக் குழுவாகவும் மக்களிடம் செல்லவுள்ளனர்.

மக்களை ஏமாற்றியாவது தேசிய மக்கள் சக்திக்குச் செல்லும் ஆசனங்களை தடுக்க முயற்சிக்கின்றனர். தேசிய மக்கள் சக்தியால் ஏற்படக்கூடிய சவாலை கருத்தில் கொண்டுதான், அனைத்துக் கட்சிகளும் ஓரணியாக போட்டியிட்டு வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து வட்டாரங்களையும் வெற்றிபெற வேண்டியதன் அவசியத்தை இந்தத் தலையங்கத்தில் பரிந்துரைத்திருந்தோம். ஆனால், அதனை செவிமடுத்துச் செயல்படுவதற்கான நிதானமோ, தூரநோக்குடன்கூடிய அரசியல் புரிதலோ தமிழ்க் கட்சிகளிடம் இல்லை.

தற்போது நடைமுறையிலுள்ள உள்ளூராட்சி தேர்தல் முறைமையானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒப்புதலோடுதான் சட்டமாக்கப்பட்டது. ஒரு வேளை இந்த முறைமையானது தமிழ் மக்களுக்கு பாதகமாக வரக்கூடுமென்னும் கருத்து அப்போது முன்வைக்கப்பட்டபோது, வடக்கு, கிழக்கில் என்ன முறையில் தேர்தல் நடைபெற்றாலும் தமிழ் மக்கள் கண்களை மூடிக்கொண்டு வீட்டுக்குத்தான் வாக்களிப்பார்கள் என்னும் இறுமாப்பிலேயே அப்போதைய கூட்டமைப்பின் தீர்மானமெடுக்கும் தலைகள் எக்காளமிட்டன.

ஆனால், கடந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் அந்த இறுமாப்பில் ஓங்கி அறைந்தது. அதன் பின்னர் முறைமையால் பின்னடைவு ஏற்பட்டுவிட்டதாக அதே தலைகள் கூறின. இலங்கைத் தமிழ் அரசு கட்சிக்குள்ள ஒரேயொரு வாய்ப்பு மாற்றுக் கட்சிகள் பலமாக இல்லாமல் இருப்பது மட்டும்தான். தென்னிலங்கையில் சிங்கள மக்களுக்கு முன்னால் ஒன்று இல்லாவிட்டால் இன்னொன்று என்று தெரிவுகள் இருக்கின்ற காரணத்தால்தான், அவர்களால் மாற்றி யோசிக்க முடிகிறது- முடிவுகளை மாற்றிக்கொள்ள முடிகிறது.

இந்தப் பின்புலத்தில்தான் கோட்டாபயவை ஆதரித்தவர்கள் அநுரவின் பின்னால் அலையாகத் திரண்டனர். தேசிய மக்கள் சக்திக்கு வரலாற்று வெற்றி கிடைக்கப்பெற்றது. தமிழ்ச் சூழலில் மாற்று என்று தங்களை அடையாளப்படுத்திக் கொண்டவர்களோ அதற்கான தகுதிநிலையோடு இல்லை. தங்களைப் பலப்படுத்திக் கொள்ளும் வழிகளையும் அவர்கள் அறியவில்லை. காலாவதியாகிப்போன சில அரசியல் தலைகளை முன்னுக்குக் காண்பிப்பதால் மாற்று அரசியல் தரப்பாகிவிட முடியாது என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை.

இந்த நிலையில் பல கட்சிகளாக சண்டையிடும் நிலையில் உள்ளூராட்சித் தேர்தல் இலகுவாக இருக்கப் போவதில்லை. மட்டக்களப்பில் தமிழ் அரசுக் கட்சி பலமான போட்டியாளர்கள் இல்லாத நிலையில் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்றது போன்று அதிசயங்கள் நிகழ்ந்தால் அது வேறு விடயம். மக்களைப் பொறுத்தவரையில் குறிப்பாக இளைய தலைமுறையினரைப் பொறுத்தவரையில் நாடு அநுரவோடு இருக்கின்றபோது, வீடும் அநுரவோடுதானே இருக்க வேண்டும் - அப்போதுதானே வீடும் துப்பரவாக இருக்கும் - நமது வாழ்விலும் ஒளிமயம் உருவாகும் - என்று எண்ணினால் என்ன செய்வது?

# வேலையில்லாப் பட்டதாரிகள் விடயத்தில் தோல்வியடைந்துள்ளார் ஜனாதிபதி அநுர

## எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு

*கொழும்பு, மார்ச் 11*

வேலையில்லாப் பட்டதாரிகள் பாரதூரமாக நிர்க்கதிக்குள்ளாக்கப்பட்டுள்ளனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

35,000 மேற்பட்டவர்கள் வேலையில்லா பட்டதாரிகளாக இருக்கிறார்கள். 20,000 பட்டதாரிகளை ஆசிரியர் தொழிலுக்கு அனுப்புகிறோம் என்று உங்களுடைய கொள்கைப் பிரகடனத்தில் நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள்.

இந்த செயற்பாடு நடைபெறுமா இல்லையா என்பது தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. கொள்கைப் பிரகடனத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தாலும் 30,000 தொடக்கம் 40,000 வரையான பட்டதாரிகளுக்கு நிலையான ஒரு வேலை வாய்ப்பை வழங்குவதற்கு வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக வழிகூறுவதற்கு ஜனாதிபதி தோல்வி அடைந்திருக்கிறார்.

ஜனாதிபதி வடமத்திய மாகாணத்தில் பட்டதாரிகளை சந்தித்து இருக்கிறார்.



பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாவதற்கு முன்பதாகவே ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வாறு மாகாண ரீதியில் பல குறைபாடுகளுக்கு மத்தியில் வேலையில்லப் பட்டதாரிகள் காணப்படுகிறார்கள். அவர்கள் பாரதூரமாக நிர்க்கதிக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்-என்றார். (அ)

# எல்ல ஓடிசி ரயிலிலிருந்து தவறி விழுந்த சீனப் பெண்ணின் நிலை கவலைக்கிடம்!

*கொழும்பு, மார்ச் 11*

ஒஹிய ரயில் நிலையத்துக்கு அருகில் காலை எல்ல ஓடிசி ரயிலில் இருந்து வீழ்ந்து சுற்றுலா பயணியொருவர் காயமடைந்துள்ளதாக ஹப்புத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சுற்றுலாப் பயணி கண்டியிலிருந்து எல்ல நோக்கிப் பயணித்த சீனாவைச் சேர்ந்த 35 வயதுடைய பெண் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த குறித்த பெண், ரயில் பணியாளர்களால் மீட்கப்பட்டு அப்புத்தளை ரயில் நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டு, சிகிச்சைகளுக்காக தியத்தலாவ ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

தற்போது இவர் மேலதிக சிகிச்சைக்காக பதுளை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணின் நிலைமை தற்போது கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# அனுமதிப்பத்திரமின்றி மாடுகளை ஏற்றிக்கொண்டுசென்றவர் கைது!

*யாழ்ப்பாணம், மார்ச் 11*

அனுமதிப்பத்திரம் இன்றி மாடுகளை கொண்டுசென்ற சந்தேகநபர் நேற்று வட்டுக்கோட்டை பொலிஸால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த குறித்த சந்தேகநபர் சுழிபுரத்தில் இருந்து லொறியில் 3 மாடுகளை கடத்திச் செல்ல முற்பட்டவேளை இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேகநபரை வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

# யோகக் கலை கற்கைநெறி!

*யாழ்ப்பாணம், மார்ச் 11*


வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக் கலைக் கற்கை நெறியின் புதிய பிரிவு நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 06 மணி முதல் காலை 08 மணி வரை நடைபெறும் இந்த வகுப்புகளில் ஆர்வமுள்ள இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ள முடியும்.

சுமார் 3 மாத காலங்களை கொண்டமைந்த இந்த அடிப்படை கற்கைநெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

பயில விரும்புவோர் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்து கொள்ளுமாறு கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. பிரிய மானவர்களின் சந்திப்பு நிகழும். மகளுக்கு நல்ல வரன் அமையும். பழையகடனைத் தீர்க்க புது வழி பிறக்கும். முன்னேறும் நாள்.

**இடபம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். சொத்துப் பிரச்னைகளுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். அதிகாரப்பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். தைரியம் கூடும் நாள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனகசப்புகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகல மான சூழ்நிலை உருவாகும். புது வாய்ப்புகள் தேடி வரும். நன்மை நடக்கும் நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை உங்கள் மேற்பார்வையிலேயே முடிப்பது நல்லது. வியாபாரத்தில் புது முதலீடுகளை தவிர்க்கவும். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். பிள்ளைகளை அன்பால் அரவணைத்துப் போங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். அலைச்சலுடன் ஆதாயம் தரும்.

**கன்னி**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள்.

**துலாம்**
உணர்ச்சிப் பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப் பேசுவீர்கள். செயல்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார். மனநிறைவு கிட்டும் நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் ஒருவரை மாற்றி ஒருவர் குறைக் கூறிக் கொண்டிருக்க வேண்டாம். கவனம் தேவைப்படும் நாள்.

**மகரம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் புது பொறுப்பை ஏற்பார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கும்பம்**
உற்சாகமாக இருப்பீர்கள்.சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். அமோகமான நாள்.

**மீனம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

# தீர்மானம் எடுக்கும் நிலைக்கு பெண்கள் வருதல் வேண்டும்

## அமைச்சர் சரோஜா யாழில் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச்.11

"பெண்கள் தீர்மானங்கள் எடுக்கும் நிலைக்கு வருதல் வேண்டும். அந்த வகையில் பெண்களின் பங்களிப்பு விரிவாக்கப்பட வேண்டும்"- இவ்வாறு மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்ரி போல்ராஜ் தெரிவித்தார்.

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சும் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகமும் இணைந்து நடத்திய சர்வதேச மகளிர் தினம் யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அமைச்சர் சரோஜா மேலும் கூறுகையில்,

தாம் அமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் அரசாங்க அதிகாரிகள் மற்றும் சமூகமட்ட அமைப்புகளுடன் கலந்து கொள்ளும் முதலாவது நிகழ்வு இது எனவும், தமது அரசாங்கமானது பெண்கள் மற்றும் சிறுவர்கள் நலன் தொடர்பில் கூடிய கவனம் செலுத்திவருவதாகவும் கூறினார். மேலும், தமது அரசாங்கமானது வடமாகாண அபிவிருத்திக்கு வரவு - செலவுத் திட்டம் மூலம் கூடியளவு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும், பெண்களின் உரிமை, சமத்துவம், வலுவூட்டுதல் என்பன பேணப்படும் எனவும் குறிப்பிட்டார். அத்தோடு, பெண்கள் தீர்மானங்கள் எடுக்கும் நிலைக்கு வருதல் வேண்டும் எனவும், அந்த வகையில் பெண்களின் பங்களிப்பு விரிவாக்கப்பட வேண்டும் எனவும் எடுத்துரைத்தார். (எ-05)

### புனர்வாழ்வு நிலையத்தில் இருந்த

# மகனுக்கு ஹெரோயின் வழங்க முற்பட்ட உப பொலிஸ் பரிசோதகர் கைதானார்!

வவுனியா,மார்ச்.11

வவுனியா, பூந்தோட்டம் போதைப்பொருள் புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வு பெற்று வரும் தனது மகனுக்கு ஹெரோயின் போதைப்பொருள் வழங்க முற்பட்டதாக உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

போதைப்பொருள் பாவனை தொடர்பில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்க மைய இளைஞர் ஒருவர் வவு னியா, பூந்தோட்டம் புனர் வாழ்வு நிலையத்துக்கு 6 மாத புனர்வாழ்வுக்காக சேர்க்கப்பட்டிருந்தார்.

தற்போது, 4 மாதங்கள் நிறைவடையும் நிலையில் குறித்த இளைஞனை பார்வையிடுவதற்காக குருநாகல் பகுதியில் உள்ள பொலிஸ் நிலையம் ஒன்றில் குற்றத்தடுப்புப் பிரிவில் உப பொலிஸ் பரிசோதகராக கடமையாற்றும் தந்தையும், பொலிஸ் உத்தியோகத்தராக கடமையாற்றும் தாயும் வருகை தந்துள்ளனர்.

புனர்வாழ்வு நிலையத்துக்குள் சென்று தமது மகனைப் பார்வையிட்ட போது அவர்கள் இருந்த இடத்தை நோக்கி பொலிஸ் மேப்ப நாய் வந்ததை அவதானித்த அவர்கள் தமது பையில் இருந்த பொதி ஒன்றை எடுத்து வெளியே வீசியுள்ளனர். இதனை காவல் கடமையிலிருந்த பாதுகாப்புத் தரப்பினர் அவதானித்துள்ளனர். உடனடியாக மோப்ப நாயின் உதவியுடன் அதனை சோதனையிட்ட போது அதில் 240 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து உப பொலிஸ் பரிசோதகர் கைது செய்யப்பட்டு வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

மேலதிக விசாரணைகளின் பின் குறித்த உப பொலிஸ் பரிசோதகரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ-10)

# 'மாணிக்கவாசகரும் பண்டாய நான்மறையும்' சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச்.11

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் - 48 தெல்லிப்பழை அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 04. 00 மணிக்கு நடைபெறவுள்ளது. மாணிக்கவாசக சுவாமிகள் குருவணக்கத்தை தொடர்ந்து சைவப்புலவர் செ. த. குமரன் "மாணிக்கவாசகரும் பண்டாய நான்மறையும்" என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவு ஆற்றுவார். சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

# "அவலக்குரலை தடுக்க வேண்டும்"

யாழ்ப்பாணம், மார்ச்.11

நவீன உலகிலும் பெண்களுக்கான அவலக்குரல் உள்ளது. அதனைத் தடுக்க வேண்டும் என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சும் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகமும் இணைந்து நடத்திய சர்வதேச மகளிர் தினம் யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில், கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நவீன உலகிலும் பெண்களுக்கான அவலக்குரல் உள்ளது எனவும், அதனைத் தடுக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டதுடன், எமது நாட்டுக்கான அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதில் மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் பெண்களின் பங்களிப்பு அதிகமாகவுள்ளதாகவும் கூறினார். ஆடைத் தொழிற்சாலைகள் மற்றும் தேயிலை - தெங்கு மற்றும் றப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் பெண்களின் பங்களிப்பு பற்றியும் குறிப்பிட்டு மகளிர் தின வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை இலக்காகக் கொண்டு சதித்திட்டங்கள் தீட்டுகிறது அரசு

## ஹர்ஷண ராஜகருணா குற்றச்சாட்டு



**கொழும்பு, மார்ச் 11**

**தேர்தலை இலக்காகக் கொண்டு அரசாங்கம் சில சதித்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுடன் கலந்துரையாட தீர்மானித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா தெரிவித்தார்.**

கம்பஹாவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-தாம் என்ன செய்கின்றோம் என்பது அரசாங்கத்துக்கும் தெரியாது.

அரசாங்கத்தில் என்ன நடக்கிறது என்பது அமைச்சர்களுக்கு தெரியாது. அவ்வாறானதொரு நிலைமையே தற்போது காணப்படு கிறது. அனுபவமற்றவர்களிடம் ஆட்சியை ஒப்படைத்தால் இதுவே இடம்பெறும்.

தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இவர்கள் கூறினாலும், நடைமுறையில் அதனை அவதானிக்கக் கூடியதாக இல்லை.

பாதாள உலகக் குழுக்களின் செயற்பா டுகள் கூட இன்னும் கட்டுப்ப டுத்தப்படவில்லை. எனவே தேசிய பாதுகாப்பு தொடர்பில் தனிப்பட்ட ரீதியில் எம்மால் திருப்தியடைய முடியாது.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் போன்றோர் தலைமறைவாகியுள்ளனரா அல்லது மறைத்து வைக்கப்பட்டுள்ளனரா என்பது எமக்குத் தெரியாது.

அவர்களை கண்டுபிடிக்கவேண்டிய பொறுப்பு அதிகாரிகளுடையதாகும். சட்டத்தை நடைமு றைப்படுத்துவதற்கான அதிகாரம் அரசாங்கத்தின் பொறுப்பாகும். அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

தேர்தலை இலக்காகக் கொண்டு அரசாங்கம் சில சதித்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

இது தொடர் பில் தேர்தல் ஆணைக்குழு வுடன் கலந்துரையாட தீர்மா னித்துள்ளோம். தேர்தல் காலங் களில் பொது சொத்துக்கள் பிரசாரங்களுக்காக பயன்படுத் தப்படுகின்றமை சட்ட விரோத மானதாகும்-என்றார். (அ)

# மதுபோதையில் மயங்கியிருந்த சாரதி, நடத்துநர் பணி நீக்கம்!

கொழும்பு, மார்ச் 11

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பொலனறுவை டிப்போவில் கடமையை மீறிய குற்றச்சாட்டின் கீழ் சாரதி மற்றும் நடத்துநர் ஒருவர் தற்காலிகமாக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

வெலிகந்தை மற்றும் கல்கந்த இடையே பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்தின் சாரதி மற்றும் நடத்துநர், கடமை நேரத்தில் மதுபோதையில் கடமைகளை புறக்கணித்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாகவே இவ்வாறு பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் பிற்பகலில் சம்பந்தப்பட்ட பேருந்தின் சாரதியும் நடத்துநரும் வெலிகந்தை போக்குவரத்துச் சபையின் ஓய்வறையில் மதுபோதையில் வீழ்ந்து கிடப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்த நிலையில், பின்னர் வெலிகந்தை பொலிஸ் அதிகா ரிகள் குழு சம்பவ இடத்துக்கு சென்றுள்ளது.

சம்பவ இடத்தில் நடத்துநர் ஏற்கனவே மதுபோதையில் தூங்கிக் கொண்டிருந்ததாகவும், சாரதி தப்பி ஓடிவிட்டதாகவும் தெரியவருகிறது.

வெலிகந்தை பேருந்து நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த குறித்த பேருந்தானது கல்கந்த பகுதிக்குச் செல்லும் ஒரே பேருந்து என்றும், பாடசாலை மாணவர்கள் உட்பட பயணிகள் குழு அத்தருணத்தில் பேருந்தில் அமர்ந்திருந்தனர் எனவும் கூறப்பட்டது.

எனினும், சாரதி மற்றும் நடத்துநர் இன்றி பேருந்து சேவையை இயக்க முடியாத நிலை உருவானதால், வெலிகந்தை பொலிஸார், பொலிஸ் ஜீப்பில் பயணிகளை ஏற்றிச் சென்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக பொலனறுவை டிப்போ அதிகாரிகள் வெலிகந்த பொலிஸில் முறைப்பாடு அளித்துள்ளதாகவும், விசாரணைகள் நிலுவையில் உள்ளதால் சாரதி மற்றும் நடத்துநர் தற்காலிகமாக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் பொலனறுவைடிப் போவின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். (அ)

கம்பஹா சூட்டுச் சம்பவம்

# தொலைபேசி அழைப்பில் வந்த அச்சுறுத்தல் குறித்து விசாரணை

கொழும்பு, மார்ச் 11

கம்பஹா அகரவிட்ட பிரதேசத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இருவருக்கும் அநாமதேய தொலைபேசி அழைப்புகள் ஊடாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த இரண்டு பேர் கம்பஹா அகரவிட்ட பகுதியில் துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பி சென்றனர்.

மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையத்தை சேர்ந்த இருவரை இலக்கு வைத்து இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த இருவர் கம்பஹா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். சம்பவத்தில் கடுகஸ்தர மற்றும் யக்கல ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவர் காயமடைந்தனர். (அ)

# பிடியாணை பிறப்பித்து 11 நாள் கடந்தும் மறைந்துள்ள தேசபந்து தென்னக்கோன்!

கொழும்பு, மார்ச் 11

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கைது செய்ய நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்து 11 நாட்கள் கடந்துவிட்ட போதிலும், இதுவரை அவர் தொடர்பான எந்த தகவலும் தெரிவிக்கப்படவில்லை.

2023 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வெலிகம - பெலன பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உள்ளிட்ட 8 பேரை கைது செய்யுமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றம் கடந்த மாதம் 27 ஆம் திகதி உத்தரவிட்டது.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தால் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அறிவிக்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறானதொரு பின்னணியில், முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் நீதிமன்றத்தை தவிர்த்து தலைமறைவாகியிருந்தால் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் அவரது அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் அனைத்தும் தடை செய்ய முடியும் என பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார பிரதி அமைச்சர் சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்துள்ளார். (அ)

# பாராளுமன்ற சிறப்புரிமையில் இருந்து குற்றச்சாட்டுகள் முன்வைக்கவேண்டாம்

## கோருகின்றது பொதுஜன பெரமுன

கொழும்பு, மார்ச் 11

பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்திக் கொண்டே அரசாங்கம் கடந்த அரசாங்கம் தொடர்பில் பட்டியல் வெளியிடுகிறது. பொது இடத்தில் இந்த குற்றச்சாட்டுக்களை முன்வைத்தால் உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.பி ரத்நாயக்க தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தேசிய மக்கள் சக்தி பொய் மற்றும் கடந்த அரசாங்கங்கள் மீதான வெறுப்பு ஆகிய இரண்டையும் பிரதான கொள்கையாக முன்னிலைப்படுத்தி தேர்தல் காலத்தில் செயற்பட்டது. மக்களை தவறாக வழிநடத்தியது. சிறந்த மாற்றத்தை எதிர்பார்த்து மக்களும் மக்களுக்கு எவ்விதத்திலும் சேவையாற்றாதவர்களை பொதுத் தேர்தலில் மக்கள் தெரிவு செய்து பாராளுமன்றத்துக்கு அனுப்பினார்கள். ஆட்சியதிகாரத்தை முழுமையாக ஒப்படைத்தார்கள்.


மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் இன்று பொய்யாக்கப்பட்டுள்ளன. மக்களின் அடிப்படை பிரச்னைகளுக்கு எவ்விதத்திலும் அரசாங்கம் தீர்வைப் பெற்றுக்கொடுக்கவில்லை. மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காக கடந்த அரசாங்கங்கள் மீதும், 75 ஆண்டுகால அரசியலையும் அரசாங்கம் விமர்சித்துக் கொண்டிருக்கிறது.

அரகலயவின்போது அரசியல்வாதிகளின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டமை மற்றும் அதற்கு வழங்கப்பட்ட நட்டஈடு பற்றி அரசாங்கம் பேசுகிறது. மக்கள் விடுதலை முன்னணி தான் எமது வீடுகளுக்கு தீ வைத்தது. பெற்றுக் கொண்ட நட்டஈடு பற்றி குறிப்பிடப்படுகிறதே தவிர வீடுகளுக்கு தீ வைத்தபவர்களின் விவரங்கள் பற்றி பேசுவதில்லை. முடிந்தால் அந்த விவரத்தையும் அரசாங்கம் வெளியிடவேண்டும்.

கடந்த அரசாங்கம் தொடர்பில் அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ பாராளுமன்ற சிறப்புரிமையில் இருந்து கொண்டு பாராளுமன்றத்தில் தொடர்ச்சியாக அறிக்கை வெளியிடுகிறார். பாராளுமன்ற சிறப்புரிமையில் இருந்துக்கொண்டு செயற்படாமல், பொது இடத்தில் இந்த குற்றச்சாட்டுக்களை முன்வைத்தால் நாங்கள் உரிய சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்போம்-என்றார். (அ)

# அறகலயவில் வீடு எரித்தோர் பட்டியலை வெளியிடுங்கள்!

## அரசாங்கத்திடம் சம்பிக்க கோரிக்கை



கொழும்பு, மார்ச் 11

வாராந்தோறும் ஒவ்வொரு பட்டியலை வெளியிடும் அரசாங்கம் இன்னுமும் வீடுகளை எரித்தவர்களின் பட்டியலை வெளியிடவில்லை என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும்,

முன்னாள் அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசாங்கம் தற்போது வீடுகள் எரிக்கப்பட்டவர்கள் பெற்றுக்கொண்ட நட்டஈட்டுத் தொகை பட்டியலை வெளியிட்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது,

எனினும், வீடுகளை எரித்தவர்களின் பட்டியலை இன்னும் வெளி யிடவில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

அந்தப் பட்டியலை வெளியிட்டால் பாராளுமன்றத்தில் காணப்படும் கட்சியில் உள்ளவர்களின் பெயர்களும் பட்டியலில் உள்ளடங்கும் என சம்பிக்க ரணவக்க வலியுறுத்தினார்.

மேலும்,

குறித்த பட்டியல் பொலிஸ்மா அதிபரிடம் உள் ளதாகவும் அதனைச் சபையில் வெளிப்படுத்துமாறும் பிமல் ரத்நாயக்கவிடம் பாட்டலி சம் பிக்க ரணவக்க கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி சபை தேர்தலில் ஜே.வி.பி. வாக்கு வங்கி சரியும்!

## கூறுகிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, மார்ச் 11

**ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களில் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) பெற்றுக் கொண்ட வாக்குகளை உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் பெற்றுக் கொள்ள முடியாது. ஆட்சியிலுள்ள அரசாங்கத்தின் எதிர்காலத்தை தீர்மானிப்பதாக இந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல் அமையும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.**

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-கடந்த தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பில் பல தொகுதிகளில் வெற்றி பெற்றது. அந்த வகையில் இம்முறைத் தேர்தலிலும் எம்மால் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆட்சியிலுள்ள அரசாங்கத்தின் எதிர்காலத்தை தீர்மானிப்பதாக இந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல் அமையும். 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சிமன்றத் தேர்தல், 2019 ஜனாதிபதித் தேர்தல், 2020 பொதுத் தேர்தல் இதற்கு சிறந்த உதாரணமாகும்.

இதற்கு முன்னரும் இவ்வாறான முடிவுகள் பதிவாகியிருக்கின்றன. இந்த சந்தர்ப்பத்தில் ஐக்கிய மக்கள் சக்தியை விட்டு வெளியேறுமளவுக்கு



புத்தி சுயாதினமற்றவர்கள் எமது கட்சியில் இல்லை. ஆனால் ஊழல், மோசடியற்ற எவரும் எம்முடன் இணையலாம். ஜே.வி.பி.யைத் தவிர வேறு எந்த கட்சியிலிருப்பவர்களுக்கும் அதற்கு வாய்ப்பளிக்கப்படும்.

தற்போது பெலவத்தையிலுள்ள ஜே.வி.பி. அலுவலகத்தின் மனித வளங்களே பாராளுமன்றத்திலுள்ளன. அவர்களால் சுயமாக செயற்பட முடியாது.

பெலவத்த அலுவ லகத்தின் கட்டளைகளுக்க மையவே செயற்படுவர். எனவே உள்ளூராட்சிமன்றங்களுக்கான உறுப்பினர்களையும் அவ்வாறு தெரிவு செய்து விட வேண்டாம். பாராளுமன்ற உறுப்பினர்கள் பரிந்துரைப்பவர்களுக்கு வாக்களிக்காமல் மக்கள் சுயமாக சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.

ஐக்கிய தேசிய கட்சியுடனான பேச்சுவார்த்தைகள் தோல்வியடையவில்லை. அதே வேளை பிறிதொரு கட்சியுடனான கூட்டணி குறித்த பேச்சுவார்த்தைகள் துரிதமாக நிறைவடையக் கூடியவையும் அல்ல. எமது பேச்சுவார்த்தைகள் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை மாத்திரம் இலக்காகக் கொண்டதும் அல்ல. அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள மாகாணசபை, ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களை இலக்காகக் கொண்டதுமாகும்.

எனவே பேச்சுவார்த்தைகளை அவசரமாக நிறைவு செய்யாது பொறுமையாக முன்கொண்டு செல்வோம். அதற்கமைய ஐ.தே.க.வில் சிலர் எம்முடன் இணையலாம். சிலர் அதனை நிராகரிக்கலாம். தற்போது எதையும் உறுதியாகக் கூற முடியாது.

எவ்வாறிருப் பினும் பொதுத் தேர்தலில் ஜே.வி.பி. பெற்றுக் கொண்ட 68 இலட்சம் வாக்குகளை இம்முறை பெற முடியாது என்பதை உறுதியாகக் கூற முடியும்-என்றார். (அ)

## பல பாதாள உலக கும்பல்களுடன் தொடர்பைப் பேணிய செவ்வந்தி!

கொழும்பு, மார்ச் 11

கணேமுல்ல சஞ்சீவ கொலைச் சம்பவத்தில் தேடப்பட்டு வரும் இஷாரா செவ்வந்தியின் பின்னணியில் பல பாதாள உலகக் கும்பல்களின் தலைவர்கள் இருப்பது சமீபத்திய விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இஷாரா செவ்வந்தி கடந்த காலங்களில் பல்வேறு பாதாள உலகக்கும்பல்களுடன் தொடர்பைப் பேணியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கணேமுல்ல சஞ்சீவ கொலைச் சம்பவம் தொடர்பில் இதுவரை 11 பேர் கைது செய்யப்பட்டிருந்தாலும் பிரதான சூத்திரதாரியான இஷாரா செவ்வந்தி இதுவரை கைது செய்யப்படவில்லை.

குறித்த பெண்ணை கைது செய்யும் நடவடிக்கையைத் தொடர்ந்தும் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## வெளிநாட்டு பணவனுப்பல் 15.1 வீதத்தினால் அதிகரிப்பு!

கொழும்பு, மார்ச் 11

கடந்த 2024 ஆம் ஆண்டு இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், கடந்த பெப்ரவரி மாதம் வெளிநாட்டு பணவனுப்பல் 15.1 வீதம் அதிகரித்துள்ளதாக இலங்கை இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி கடந்த பெப்ரவரி மாதத்தில் வெளிநாட்டு பணவனுப்பல் 548 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது.

அத்துடன் கடந்த ஜனவரி மாதத்தில் வெளிநாட்டு பணவனுப்பல் 573 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மேலதிக வகுப்புக்களுக்கு தடை

கொழும்பு, மார்ச் 11

2024 கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை தொடர்பான மேலதிக வகுப்புகளை நடத்துவது நேற்று நள்ளிரவு 12:00 மணி முதல் தடை செய்யப்பட்டுள்ளது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜெயசுந்தர அறிவித்துள்ளார்.

இந்த ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சை மார்ச் 17 ஆம் திகதி தொடங்கி மார்ச் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் மாதம்பை விபத்தில் உயிரிழப்பு!

கொழும்பு, மார்ச் 11

மாதம்பை, கலஹிடியாவ பகுதியில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.

சிலாபத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ஓட்டோ ஒன்று லொறி மற்றும் பஸ்ஸ/டன் மோதியதால் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

அதேநேரம்,

இந்த விபத்தில் மேலும் பலர் காயமடைந் துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

32, 36 வயதுடைய இரு பெண்களும்,

ஒரு வயது குழந்தையுமே விபத்தில் உயிரிழந்தவர்கள் ஆவர்.

அவர்கள் அனைவரும் மினுவங்கொடை மற்றும் ராகமவைச் சேர்ந்தவர்கள்.

விபத்தில் ஓட்டோச் சாரதி உட்பட இரண்டு ஆண்கள், இரண்டு சிறுவர்கள் மற்றும் இரண்டு சிறுமிகள் காயமடைந்து சிலாபம் பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தலவில் புனித அன்னம்மாள் தேவாலயத்தின் வருடாந்திர திருவிழாவில் கலந்துகொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போது அவர்கள் விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

விபத்து தொடர்பில் பஸ் சாரதி மற்றும் நடத்துநர் கைது செய்யப்பட்டுள்ளதுடன்,

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## மலையக ரயில் சேவை வழமைக்கு!

கொழும்பு, மார்ச் 11

பதுளையிலிருந்து புறப்பட்ட 1008 பயணிகள் ரயிலின் இயந்திரம் தடம் புரண்டதால் இடைநிறுத்தப்பட்டிருந்த மலையக ரயில் பாதையூடான ரயில் சேவைகள் நேற்றுக் காலை 8:30 மணியுடன் முழுமையாக வழமைக்கு திரும்பின.

நேற்று முன் தினம் மாலை 6:00 மணியளவில் நாவலப்பிட்டி பல்லேகம பகுதியில் இந்த ரயில் தடம் புரண்டதால், அந்தப் பாதையில் ரயில் சேவைகள் முற்றிலுமாக பாதிக்கப்பட்டிருந்தன.

இதனால், கொழும்பு கோட்டையில் இருந்து பதுளை நோக்கி பயணித்த இரவு நேர அஞ்சல் ரயில் கம்பளை ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டது.

அதே நேரத்தில் பதுளையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த இரவு நேர அஞ்சல் ரயில் நாவலப்பிட்டி ரயில் நிலையத்தில் நேற்று காலை வரை நிறுத்தப்பட்டது.

ரயில்வே அதிகாரிகளின் கூற்றுப்படி, தடம் புரண்ட ரயிலின் இயந்திரம் சுமார் 270 அடி முன்னோக்கி நகர்ந்து, மலைச்சரிவில் மோதி நிறுத்தப்பட்டது.

இந்த சம்பவத்தால் ரயில் தண்டவாளங்களுக்கும் குறிப்பிடத்தக்க சேதம் ஏற்பட்டதாக ரயில்வே கட்டுப்பாட்டு அறை அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (அ)

## ரயில் சமிக்ஞை அதிகாரிகள் இரண்டு பேர் பணிஇடைநீக்கம்

கொழும்பு, மார்ச் 11

கண்டி பிரதான ரயில் நிலையத்தில் கவனக்குறைவாகச் செயற்பட்ட ரயில் சமிக்ஞைகளைக் கையாளும் பணியாளர்கள் இருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பதுளையிலிருந்து கண்டி நோக்கி பயணித்த பொடிமெனிக்கே ரயில் பயணத்தின் போது கடமையிலிருந்த இருவரும் உறங்கிய நிலையில், குறித்த ரயில் கண்டி ரயில் நிலையத்தின் 3ஆவது மேடையைச் சென்றடைந்தது.

அந்த நேரத்தில் ரயில் சமிக்ஞைகள் உரிய முறையில் ஒளிரவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், குறித்த மேடையில் நிறுத்தப்பட்டிருந்த மற்றொரு ரயிலுடன் மோதி ஏற்படவிருந்த விபத்து, ரயில் சாரதியின் சாதுரியத்தால் தவிர்க்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரயில் சமிக்ஞைகளைக் கையாளும் பணியாளர்களின் கவனக்குறைவினாலேயே குறித்த சம்பவம் இடம்பெற்றதாக விசாரணைகளில் தெரியவந்தள்ளது. (அ)

## பேராதனை பகுதியில் விலங்குகள் வேட்டையாடிய கும்பல் சிக்கியது!

கொழும்பு, மார்ச் 11

துப்பாக்கிகள், தோட்டாக்கள் மற்றும் ஏனைய உபகரணங்களுடன் விலங்குகளை வேட்டையாடிய ஆறு சந்தேக நபர்களை பேராதனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்று முன் தினம் யஹலதென்ன பிரதேசத்துக்கு விலங்குகளை வேட்டையாட வந்தபோது பிரதேசவாசிகளால் மடிக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி பேராதனை பொலிஸ் நிலையத்தில் இரவு நேர நடமாடும் சுற்றிவளைப்பில் ஈடுபட்டிருந்த அதிகாரிகள் உரிய இடத்திற்கு சென்று பார்த்தபோது சுட்டுக்கொல்லப்பட்ட பன்றியையும் விலங்குகளை வேட்டையாடிய ஆறு நபர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 28 மற்றும் 71 வயதுடைய மாவத்தகம பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

பேராதனை பொலிஸ் நிலைய அதிகாரிகள் மேலதிக விசாரணைகளின் போது யஹலதென்ன பிரதேசத்தில் வீதியோரமாக உள்ள காட்டுப் பகுதியில் வைக்கப்பட்டிருந்த 12 போர் ரக துப்பாக்கி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.சம்பவம் தொடர்பில் பேராதனை பொலிஸாரும் மாவத் தகம பொலிஸாரும் மேலதிக விசார ணைகளை மேற்கொண் டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் விசாரணை பொறிமுறை வலுவாக்கப்படும்!

## வெளிவிவகார அமைச்சர் உறுதி!

கொழும்பு, மார்ச் 11

**வடக்கிலும், தெற்கிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கான பொறிமுறை வலுப்படுத்தப்படும் எனவும் இது விடயத்தில் விசாரணை நடத்தி நீதியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.**

'உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணை சிறப்பாக நடைபெற்றுவருகின்றது. வெளியில் தெரியாவிட்டாலும் உள்ளே விடயங்கள் காத்திரமான நடைபெற்றுவருகின்றன.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி, தாஜுதீன் கொலை, லலித், குகன் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. எனவே, விசாரணைகள் தொடர்பில்



குழப்பமடைய வேண்டாம்." எனவும் அவர் கூறினார்.

அதேவேளை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இரு வருடங்களுக்கு முன்னர் இலங்கை தொடர்பில் தீர்மானமொன்று முன்வைக்கப்பட்டது. மனித உரிமை பாதுகாக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. எனவே, மனித உரிமைகளை பாதுகாப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அத்துடன், நிகழ்நிலை காப்பு சட்டத்தையும் மாற்றுவதற்கு தீர்மானித்துள்ளோம். நீதி, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சு என மூன்று அமைச்சுகளையும் உள்ளடக்கிய வகையில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது." எனவும் வெளிவிவகார அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# கொலையில் முடிந்த வாய்த்தகராறு!

கொழும்பு, மார்ச் 11

உறவினர்கள் இருவர் பயணித்த மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதைத் தொடர்ந்து, மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் இருவருக்கும் இடையே ஏற்பட்ட வாய்த்தகராறு காரணமாக, 63 வயதுடைய நபரொருவர் கொல்லப்பட்டுள்ளதாக வரகாபொல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் வரகாபொல எத்னாவல பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன் தினம் இரவு மோட்டார் சைக்கிள்கள் இரண்டும் மோதி விபத்துக்குள்ளாகி இருந்தன.

இதன்போது ஏற்பட்ட வாய்த்தகராறு தீவிரமடைந்து, சைக்கிள் ஓட்டுநர்களில் ஒருவரான 42 வயது மருமகன், மற்றொரு சைக்கிள் ஓட்டுநரான 63 வயது மாமாவைத் தாக்கி தள்ளிவிட்டுள்ளார்.

இதன்போது, குறித்த நபர் தரையில் விழுந்துள்ளதாகவும், அவர் விழுந்த இடத்தில் இரத்தக்கறை காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குறித்த நபர் தள்ளப் பட்டபோது அவரது தலை கொங்றீட் தூண் ஒன்றில் மோதியிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர்.

பின்னர் அந்த நபர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில், அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

பின்னர், சம்பவ இடத்திற்கு சென்ற வரக்காபொல நீதவான் நீதிமன்றத்தின் நீதவான் லுஷாகா குமாரி தர்மகீர்த்தி, சம்பவ இடத்திலேயே விசாரணை நடத்தி, வரக்காபொல ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள உடலை, பிரேத பரிசோதனைக்காக கேகாலை பொது வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியிடம் அனுப்பி அறிக்கை சமர்ப்பிக்குமாறு வரகாபொல பொலிஸாருக்கு உத்தரவிட்டார். 42 வயதுடைய மருமகனை பொலிஸார் கைது செய்துள்ளனர். (அ)

# போதைப்பொருளுடன் கனேடிய யுவதி கைது!

கொழும்பு, மார்ச் 11

17.5 மில்லியன் ரூபாய் பெறுமதியான ஹஷிஷ் போதைப்பொருளை கடத்த முயற்சித்த குற்றச்சாட்டில் 20 வயது கனேடியப் பெண் ஒருவர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் நேற்று முன்தினம் இரவு விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர், இளங்கலை மாணவி என்றும் அவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட முதல் சந்தர்ப்பம் இதுவென்றும் விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவர் நேற்று இரவு 8.35 மணிக்கு எதிஹாட் எயார்வேஸ் விமானம் மூலமாக கட்டுநாயக்க விமான நிலையத்தை அடைவதற்கு முன்பு கனடாவின் ரொரன்டோவிலிருந்து அபுதாபிக்கு பயணம் மேற்கொண்டிருந்தார்.

சோதனையில், சுங்க அதிகாரிகள் அவரது பொதிகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த மொத்தம் 17 கிலோகிராம் 573 கிராம் ஹஷிஷ் போதைப் பொருளை கண்டுபிடித்தனர்.

சந்தேக நபர், கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களுடன், மேலதிக விசாரணைக்காக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உள்ள பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியக அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# கடவுச்சீட்டுக்காகக் காத்திருப்போர் பட்டியலில் உள்ள 26,000 இலங்கையர்

கொழும்பு, மார்ச் 11

புதிய கடவுச்சீட்டுக்காக 26,000 இற்கும் மேற்பட்ட வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளதாக வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அருண் ஹேமச்சந்திர தெரிவித்தார்.

குறித்த விண்ணப்பங்கள் வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்கள் மற்றும் உயர்ஸ்தானிகராலயங்களால் பெறப்பட்டு சுமார் இரண்டு வருடங்கள் கடந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

சிலரின் வெளிநாட்டு கடவுச்சீட்டுகள் காலாவதியாகிவிட்டதால், அவர்கள் ஏராளமான பிரச்னைகளை எதிர்கொள்வதாக பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.



இதனால் வெளிநாடுகளில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் மாணவர்கள் தங்கள் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்தப் பிரச்னைக்கு உடனடித் தீர்வை வழங்குவதற்காக வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் இடையே கலந்துரையாடலும் இடம்பெற்றுள்ளது.

இருப்பினும், இந்த மாத இறுதிக்குள் இந்தப் பிரச்னையை முடிந்தவரை தீர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று கூறிய பிரதி அமைச்சர், தற்போதைய அரசாங்கம் இந்த நெருக்கடியை உருவாக்கவில்லை என்பதை வலியுறுத்தினார்.

இதேவேளை, வெளிநாட்டு கடவுச்சீட்டுக்களை பெறுகின்ற போதிலும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்களிலும் இடைத்தரகர்களின் உதவியை நாடவேண்டாம் என்று பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார். (அ)

# இலங்கையை வந்தடைந்தார் அமெ. பாடகர் எலோ பிளாக்!

கொழும்பு, மார்ச் 11

உலகப் புகழ்பெற்ற அமெரிக்க பாடகர் எலோ பிளாக் நேற்றுக் காலை இலங்கை வந்தடைந்தார்.

பல பிரபல பாடல்களை பாடிய அவர், அமெரிக்காவில் கிராமி விருதுகளுக்கான பரிந்துரைகளில் முக்கிய பங்காற்றியவர்.

ஜனாதிபதியின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான சிரேஷ்ட ஆலோசகர், அமெரிக்காவின் ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கோமிகா உடுகமசூரியவின் அழைப்பின் பேரில், இலங்கையில் சுகாதாரத் துறையில் முதலீட்டுத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடல்களுக்காக எலோ பிளாக் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

அவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் இலங்கை சுற்றுலா அபிவிருத்திப் பணியக அதிகாரிகள் மற்றும் பேராசிரியர் கோமிகா உடுகமசூரியவினர் வரவேற்றனர். (அ)



# சிறுநீரக நோயால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை இலங்கையில் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 11

நாட்டில் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அதன்படி, நாட்டில் 2.2 மில்லியன் மக்கள் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நீரிழிவு நோய் காரணமாக சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக மாளிகாவத்தையில் உள்ள தேசிய சிறுநீரக வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் தெரிவித்துள்ளார். (அ)

# மனித பாவனைக்குதவாத தேங்காய் எண்ணெயுடன் இரண்டு பேர் கைது!

கொழும்பு, மார்ச் 11

மனித பாவனைக்குதவாத 15,620 லீற்றர் தேங்காய் எண்ணெயுடன் இரண்டு சந்தேக நபர்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மின்னேரியா பிரதேசத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த லொறி ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், கொழும்பிலிருந்து பொலன்னறுவை பிரதேசத்தில் உள்ள தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிலையம் ஒன்றுக்காக இந்த தேங்காய் எண்ணெயை லொறியில் கொண்டு செல்வதாகத் தெரியவந்துள்ளன.

சந்தேக நபர்களிடமிருந்து மனித பாவனைக்குதவாத 15,620 லீற்றர் தேங்காய் எண்ணெய் அடங்கிய 35 பீப்பாய்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு உடனடி தீர்வு வழங்கப்பட வேண்டும்"


அக்கரைப்பற்று, மார்ச்.11

**பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தனியான சேவைப் பிரமாணக் குறிப்பை உருவாக்குவதற்கு சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகள் உடனடி தீர்வு பெற்றுத்தர முன்வர வேண்டும் என்று அம்பாறை மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத் தலைவர் கபீர் கலீல் தெரிவித்தார்.**

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில் உள்ள தனியார் விடுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், "அம்பாறை மாவட்டத்தில் அரச திணைக்களங்களில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் சம்பந்தமாக பல்வேறு கலந்துரையாடல்கள் பல கட்டங்களில் எம்மால் நடத்தப்பட்டுள்ளன. எனவே, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் இடமாற்றம், சம்பளக் கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் தொழில் கடமை ரீதியான விடயங்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தனியான சேவைப் பிரமாணக் குறிப்பை உருவாக்குதல் போன்ற பல்வேறுபட்ட பிரச்னைகளுக்கு தீர்வுகாண சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகள் உதவ முன்வர வேண்டும்"- என்றார். (எ)

# சம்பூரில் அகாலத்தின் குரல் கவிதை நூல் வெளியீட்டு விழா



திருகோணமலை, மார்ச்.11

திருகோணமலை, சம்பூர் பிரியங்கன் பாக்கியரெத்தினம் எழுதிய அகாலத்தின் குரல் கவிதை நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கவிஞர் கனக. யோகானந்தன் தலைமையில் சம்பூர் பண்பாட்டு மண்டபத்தில் சம்பூர் தமிழ்க் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது. (எ-04)

# அடிக்கல் நாட்டும் விழா




திருக்கோவில், மார்ச்.11

அம்பாறை மாவட்டம், திருக்கோவில் குட்நிக் விளையாட்டு மைதானத்தின் மீள் புனரமைப்புக்கான அடிக்கல் நாட்டும் விழா நேற்று முன் தினம் நடைபெற்றது. (எ-07)

# பொத்துவிலில் உள்ளூராட்சி மன்ற தேர்தல் குறித்து கலந்துரையாடல்

பொத்துவில், மார்ச்.11

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான அஷ்ரப் தாஹிர் அம்பாறை மாவட்டம் பொத்துவில் பிரதேச முக்கியஸ்தர்களுடன் நேற்று முன்தினம் விசேட கலந்துரையாடலொன்றை மேற்கொண்டிருந்தார்.




இதன்போது, எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வியூகங்கள் தொடர்பில் விரிவாக ஆராய்ந்ததுடன் கட்சியின் எதிர்காலச் செயல்பாடுகள் தொடர்பிலும் வேட்பாளர்கள் தெரிவு சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டன.

இதில், கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், மாவட்ட செயல்குழு உறுப்பினர்கள், பொத்துவில் பிரதேச அமைப்பாளர்,

பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்கள், வட்டார அமைப்பாளர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர். (எ)

# "பெண்கள் உரிமைகள் குறித்து நாம் விழிப்புடன் இருப்போம்"

கல்முனை, மார்ச்.11

"பெண்கள் உரிமைகள் குறித்து நாம் விழிப்புடன் இருப்போம்" என்று வலியுறுத்தி கல்முனையில் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் நடைபெற்றன.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு அம்பாறை மாவட்டம், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி. ஜே. அதிசயராஜ் வழிகாட்டலில் மகளிர் அபிவி ருத்தி உத்தியோகத்தர் திருமதி தனலெட்சுமி முரசொலி மாறன் தலைமையில் விசேட நிகழ்வு கள் நடைபெற்றன.




இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் திருமதி கங்கேஸ்வரி கமலநாதன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக கிராம நிர்வாக உத்தியோகத்தர் ஏ. அமலதாஸ், பெண்கள் அபிவிருத்தி மன்றம் ஸ்தாபக தலைவி ருத் சந்திரிகா சுரேஸ், மத்தியஸ்த சபை அபிவிருத்தி உத்தியோகத் தர் கே. அருள் பிரசாந்தன் எனப்பலர் கலந்து கொண்ட னர்.

இம்முறை "பெண்கள் உரிமைகள் குறித்து நாம் விழிப்புடன் இருப்போம்" என்ற தொனிப்பொருளில் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டது.

வீட்டு வன்முறை, பால்நிலை சமத்துவம் மற்றும் மகளிர் தின நிகழ்வு தொடர்பான விழிப்புணர்வு, மகளிர் பற்றிய சட்டங்கள், குற்றங்கள், பாதிப்பு மற்றும் போதைப் பொருளால் சீரழியும் குடும்பங்கள் பற்றிய விழிப்புணர்வு செயலமர்வு உட்பட பல நிகழ்வுகள் நடைபெற்றன. (எ-02)

# சர்வதேச மகளிர் தின விழா





மட்டக்களப்பு, மார்ச்.11

"நிலையான எதிர்காலத்தை கட்டியெழுப்ப அவள் வலுவான வழிகாட்டியாக இருப்பாள்" என்ற தொனிப்பொருளின் கீழ் மட்டு. மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த மகளிர் தின விழா பிரதேச செயலாளர் உ. உதயசிறீதர் தலைமையில் கடந்த 8 ஆம் திகதி பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது, பெண் சுயதொழில் முயற்சியாளர்களுக்கான வாழ்வாதார கடன் வழங்கும் நிகழ்வு நடைபெற்றதுடன், சுயதொழில் முயற்சியாளர்களின் அனுபவப் பகிர்வும் நடைபெற்றது.

மேலும், பெண் சுயதொழில் முயற்சியாளர்களை கௌரவிக்கும் நிகழ்வும், பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது. அத்துடன், பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் கலை நிகழ்வுகளும் மகளிர் தினத்தை அலங்கரித்தன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்ஜென்ரீனாவில் பேரிடர்! இதுவரை 20 பேர் உயிரிழப்பு

பியூனோஸ் அயர்ஸ், மார்ச்.11

**ஆர்ஜென்ரீனாவில் தொடரும் கனமழை, வெள்ளத்தில் சிக்கி நேற்றுக்காலை 09.00 மணிவரையான காலப்பகுதியில் 20 பேர் உயிரிழந்தனர்.**



தென் அமெரிக்காவில் அமைந்துள்ள நாடு ஆர்ஜென்ரீனா. இந்த நாட்டின் பியூனோஸ் அயர்ஸ் மாகாணம் பாஹியா பிளான்கா நகரில் கடந்த 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் கனமழை பெய்துவருகிறது.

இதனால், ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. நகரின் பல்வேறு பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இதனிடையே, கனமழை, வெள்ளத்தால் நேற்று முன்தினம் 10 பேர் உயிரிழந்த நிலையில் நேற்று பலி எண்ணிக்கை 20 ஆக அதிகரித்தது.

மேலும், பலர் படுகாயமடைந்துள்ளனர். அதேவேளை, வெள்ளத்தில் சிக்கி பலர் மாயமாகினர். மீட்புப்பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. (எ)

# கனடாவின் பிரதமராக மார்க் கார்னி தெரிவு



ஒட்டாவா, மார்ச்.11

கனடாவின் புதிய பிரதமராக மார்க் கார்னி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பொருளாதார ரீதியாக கனடா தற்போது பல்வேறு பிரச்னைகளைச் சந்தித்து வருகிறது. மேலும், அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப், கனடா பொருட்களுக்கு வரியை அதிகரிப்பது தொடர்பான அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். இது கனடா அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையில், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, தனது பதவியை இராஜினாமா செய்வதாக கடந்த ஜனவரி மாதம் அறிவித்தார். லிபரல் கட்சியின் தலைவரான ஜஸ்டின் ட்ரூடோ, கடந்த 2015ஆம் ஆண்டு முதல் கனடாவின் பிரதமராக பதவியேற்றார். அவர் பதவி விலகியதைத் தொடர்ந்து, லிபரல் கட்சியின் அடுத்த தலைவரை தெரிவு செய்வதற்கான தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில், மார்க் கார்னி 1,31,674 வாக்குகள் பெற்று 85.9 சதவீத வாக்குகளுடன் வெற்றி பெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்ட கிறிஸ்டியா பிரீலாண்ட் 11,134 வாக்குகளும், கரீனா கோல்ட் 4,785 வாக்குகளும் பெற்றனர். இதன் மூலம், லிபரல் கட்சியின் புதிய தலைவராகவும், கனடாவின் 24ஆவது பிரதமராகவும் மார்க் கார்னி தெரிவு செய்யப்பட்டுள்ளார். (எ)

# ரஷ்யா, சீனா மற்றும் ஈரான் கூட்டு கடற்படைப் பயிற்சி!

மொஸ்கோ, மார்ச்.11

இந்திய பெருங்கடலில் இம்மாத இறுதியில் ரஷ்யா, சீனா மற்றும் ஈரான் கடற்படையினர் இணைந்து பயிற்சியில் ஈடுபட திட்டமிடப்பட்டுள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி புடின் மற்றும் ஈரான் ஜனாதிபதி மசூத் பெஸ்கியன் இடையே கடந்த ஜனவரியில், வர்த்தகம் மற்றும் இராணுவம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையில், ஒப்பந்தம் ஒன்று கையெழுத்திடப்பட்டது. இந்தச் சூழலில், ஈரான், சீனாவுடனான கூட்டு கடற்பயிற்சியில் ரஷ்யா ஈடுபடவுள்ளது.

இது குறித்து ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையில், பாதுகாப்பு வளையம் - 2025 என்ற பெயரில் மார்ச் மாத இறுதியில், இந்திய பெருங்கடலில் ஈரானுக்கு அண்மையில் சீனா மற்றும் ஈரானுடன் சேர்ந்து ரஷ்யா கூட்டு கடற்பயிற்சியில் ஈடுபடவுள்ளது என தெரிவித்துள்ளது.

ஈரானில் உள்ள சபஹர் துறைமுகத்திலிருந்து சற்று தொலைவில் இந்தப் பயிற்சி நடைபெறும் என்று ஈரானிலிருந்து வெளிவரும் அரசு ஊடக செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, சீன அரசு ஊடகம் வெளியிட்ட செய்தியில், சீனாவின் கடற்படையைச் சேர்ந்த போர்க்கப்பல் ஒன்றும் மற்றும் சரக்கு விநியோக கப்பல் ஒன்றும் இதில் ஈடுபடும்.

இதில், கடல் சார்ந்த இலக்குகளை தாக்கும் வகையில், சேதங்களை கட்டுப்படுத்துதல், கூட்டாக இணைந்து தேடுதல் மற்றும் மீட்புப் பணியில் ஈடுபடுவது உள்ளிட்ட பயிற்சிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. (எ)

# ஆப்கானிஸ்தான் முகாமில் கூரை இடிந்ததில் 6 பேர் பலி

கராச்சி, மார்ச்.11

பாகிஸ்தானில் உள்ள ஆப்கானிஸ்தான் முகாமில் மேற்கூரை இடிந்து விழுந்ததில் சிக்கி 6 பேர் பலியாகினர். 4 பேர் காயமடைந்தனர்.

பாகிஸ்தானின் கராச்சிக்கு உட்பட்ட புறநகர் பகுதியில் ஆப்கானிஸ்தான் மக்களுக்கான முகாம் ஒன்று அமைந்துள்ளது. இதிலிருந்த வீடு ஒன்றின் மேற்கூரை நேற்று முன்தினம் மாலை திடீரென இடிந்து விழுந்தது. இதில் சிக்கி, பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 6 பேர் பலியாகினர். 4 பேர் காயமடைந்தனர்.




விபத்துக்கான காரணம் பற்றி விசாரணை நடைபெற்று வருகிறது. பாகிஸ்தானில் வசிக்கும் ஆப்கானிஸ்தான் அகதிகள் இம்மாதம் 31ஆம் திகதிக்குள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று பாகிஸ்தான் உள்துறை அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

அவர்கள் கண்ணியத்துடன் சொந்த நாடு திரும்ப வசதியாக, முன்பே போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு விட்டது என்றும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது. அகதிகள் தாமாக வெளியேறாவிட்டால் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி அவர்கள் நாடு கடத்தப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "காஸா விற்பனைக்கு அல்ல" ட்ரம்ப்புக்கு கடும் எச்சரிக்கை

எடின்பர்க், மார்ச்.11

"காஸா விற்பனைக்கு அல்ல" என்று பலஸ்தீன குழுவினர் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், காஸா போர் குறித்து கூறுகையில், ஹமாஸ் அமைப்பினர் தங்கள் வசமுள்ள இஸ்ரேலிய பணயக்கைதிகள் அனைவரையும் விடுவிக்க வேண்டும் என்று கூறியதோடு, காஸாவை கைப்பற்றி அதனை மத்திய கிழக்கின் சுற்றுலா தளமாக மாற்றுவோம் எனவும் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், ட்ரம்பின் பேச்சுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஸ்கொட்லாந்து நாட்டில் அவருக்கு சொந்தமான கோல்ப் மைதானத்துக்குள் பலஸ்தீன குழுவினர் சிலர் புகுந்து, அங்குள்ள புல்வெளி பகுதியில் "காஸா விற்பனைக்கு இல்லை" என்று பிரமாண்டமாக எழுதி வைத்துள்ளனர்.

மேலும், கோல்ப் மைதானம் முழுவதும் குழிகள் தோண்டப்பட்டு, ட்ரம்ப் காஸாவை தனது சொத்தாக கருத முயற்சித்தால், அவரது சொந்த சொத்து தங்களால் சூறையாடப்படும் என பலஸ்தீன குழுவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பில் ஸ்கொட்லாந்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (எ)

# இந்து கோவில்மீது தாக்குதல் இந்திய அரசு கடும் கண்டனம்

நியூயோர்க், மார்ச்.11

அமெரிக்காவில் இந்து கோவில் மீது தாக்குதல் நடத்தப்பட்டதற்கு இந்தியா கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

கலிபோர்னியா மாநிலத்தில் பாப்ஸ் அமைப்பு சார்பில் கட்டப்பட்டு நிர்வகிக்கப்படும் சுவாமி நாராயணன் கோவில் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சினோ ஹில்ஸ் பகுதியில் நடந்த இந்த சம்பவம் அங்கு வாழும் இந்துக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதுபற்றி பாப்ஸ் அமைப்பு வெளியிட்டுள்ள செய்தியில், "இந்த முறை கலிபோர்னியாவின் சினோ ஹில்ஸில் மற்றொரு கோவில் அவமதிக்கப்பட்டுள்ளது. இந்து சமூகம் வெறுப்புக்கு எதிராக உறுதியாக நிற்கிறது. வெறுப்பை வேரூன்ற விடாமல் தடுக்க சினோ ஹில்ஸ் மற்றும் தெற்கு கலிபோர்னியாவில் உள்ள சமூகத்துடன் இணைந்து பணியாற்றுவோம். அமைதியும் இரக்கமும் நிலவுவதை நமது மனிதநேயமும் நம்பிக்கையும் உறுதி செய்யும்" என கூறப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளில் 10 இந்து கோவில்கள் தாக்கப்பட்டிருப்பதாக வட அமெரிக்க இந்து அமைப்புகளின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

சினோ ஹில்ஸ் இந்து கோவில் மீதான தாக்குதலை இந்தியா வன்மையாக கண்டித்துள்ளது.

இதுபோன்ற இழிவான செயல்களை வன்மையாக கண்டிப்பதாகவும், தாக்குதலுக்கு காரணமானவர்கள் மீது உள்ளூர் நிர்வாகம் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், வழிபாட்டுத் தலங்களுக்குப் போதுமான பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்றும் இந்திய வெளிவிவகார செய்தித் தொடர்பாளர் ரன்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார். (எ)

# பாகிஸ்தானில் நிலநடுக்கம்

இஸ்லாமாபாத், மார்ச்.11

பாகிஸ்தானில் நேற்று அதிகாலை 02. 46 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 4. 2 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

170 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை. முன்னதாக, இந்த மாதம் கடந்த 8ஆம் திகதி பாகிஸ்தானில் 4.3 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்ளுதல் ஒரு தேர்தல் - ஓர் அணி - ஒரு மக்கள்



யதீந்திரா


அரசியலில் அதிகம் உரையாடியாகிவிட்டது. புதிதாக உரையாடுவதற்கு ஏதாவது இருக்கின்றதா என்றால் நிச்சயமாக இல்லை. யுத்தம் இல்லாத கடந்த பதினைந்து வருடங்களில் எவ்வாறு ஆமை சத்தடியில்லாத நேரங்களில் மெதுவாக தலையை நீட்டுமோ, அப்படித்தான் ஒற்றுமை என்னும் சொல்லும் ஒவ்வொரு தேர்தல்களின் போதும் மெல்ல வெளியில் தெரிவதுண்டு. பின்னர் தேர்தல் சத்தம் ஓய்ந்ததும் அனைத்தும் பழங் கதையாகிவிடும். மெல்லத் தெரிந்த ஒற்றுமை பின்னர் மெல்லச் செத்துவிடும்.

தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித் துவம் செய்வதாக கூறிக் கொள்ளும் கட்சிகள் மத்தியில் ஒன்றாக நில்லுங்கள் என்று கூறுவதானது, அடிக்கடி சண்டை போட்டுக் கொண்டிருக்கும் சிறுவர்கள் மத்தியில், நீங்கள் எல்லோரும் சண்டை பிடிக்காமல் விளையாட வேண்டும் என்று சொல்வது போன்றதுதான். ஆனா லும் சிறுவர்கள் சண்டை பிடிப்பதை விடுவதாக இல்லை. மீண்டும் - மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் என்பது போல, தமிழ் கட்சிகள் மல்லுக் கட்டுவ தும், அவர்களுக்கு ஒற்றுமையை போதிப் பதாகவுமே - கடந்த பதினைந்து வருடங் கள் இறந்துவிட்டது.

உள்ளூராட்சித் தேர்தலை தமிழ் கட்சி கள் எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும்? எவ்வாறு எதிர்கொண்டால் அது அரசியல் ரீதியில் சரியானது? இந்தக் கேள்விகளை முன்வைத்து சிந்திக்க முற்படும் போது - எழும் முதல் கேள்வியே, இனி யும் ஒற்றுமை பற்றி பேசுவதால் ஏதாவது பயன் இருக்கின்றதா? இதுவரையில் பேசியதால் எதுவும் நிகழவில்லையே - அவ்வாறாயின் இனிப் பேசுவதால் என்ன நடந்து விடப் போகின்றது? இந்தக் கட்டுரையின் நோக்கம் ஒற்றுமையை போதிப்பது அல்ல ஏனெனில் அதனால் எந்தப் பயனும் இல்லை. அதே போன்று தமிழ் மக்களை தேசமாகம் திரட்டுதல் என்னும் மோசடிக் கதைகளை புனைவதும் இந்தக் கட்டுரையின் நோக்கம் அல்ல. ஏனெனில் தமிழ் பொது வேட்பாளர் முயற்சி அவ்வாறான கதைகளின் பொருத்தமின்மையை அம்பலப்படுத்தி விட்டது.

அரசியலில் தீர்மானங்களை மேற்கொள்வது என்பது எப்போதுமே குறிப்பிட்ட சூழலோடு பின்னிப்பிணைந்த ஒன்றுதான். காலத்தே பயிர் செய்வது என்பது போன்று, காலத்தை அறிந்தே அரசியல் செய்ய வேண்டும். ஈழத் தமிழர் அரசியல் வரலாற்றிலேயே இதற்கான உதாரணங்களை காண முடியும். ஈழத் தமிழர் அரசியல் வரலாற்றில் இடம் பெற்ற ஒன்றிணைவு முயற்சிகள் எவையுமே கட்சிகளின் தலைவர்களது தூரநோக்கினாலோ, பெருந்தன்மையினாலோ அல்லது சிவில் சமூகத்தின் தலையீடுகளினாலோ நிகழவில்லை - மாறாக, அன்றைய சூழ்நிலையின் காரணமாகவே இடம்பெற்றது. தமிழர் விடுதலைக் கூட்டணி தொடக்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம் வரையிலான கதைகள் இதனைச் சொல்லும்.

அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை நிரந்தர எதிரிகளும் இல்லை என்பது எக்காலத்திற்குமான அரசியல் யதார்த்தமாகும். அரசியலை தன்முனைப்பு வாதங்களிலிருந்தும் விருப்பு வெறுப்புக்களிலிருந்தும் நோக்குபவர்கள் அரசியல் ரீதியில் எப்போதுமே சரியானவர்களாக இருக்க முடியாது. அரசியலை யதார்த்தங்களால் நிறுத்துப் பார்த்து, ஒவ்வொரு காலகட்டத்திலும் எடுக்க வேண்டிய பொருத்தமான நிலைப்பாடுகளை எடுப்பதற்கான அரசியல் துணிவும் தலைமைத்துவமும் எவரிடம் இருக்கின்றதோ அவர்களே, ஒரு இனத்திற்கு தலைமை தாங்கும் தகுதியுடைவர்களாக இருப்பர்.




ஒரு வேளை அவ்வாறான முடிவுகள் ஒரு கட்சியினது அல்லது ஒரு சில நபர்களது இருப்பிற்கான தந்திரோபாய முயற்சியாகக் கூட இருக்கலாம். ஆனால் அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒரேயொரு விடயத்தை மட்டுமே நோக்க வேண்டும் - அதாவது, அந்த அரசியல் முன்னெடுப்பு தமிழ் மக்களை அரசியல்ரீதியில் பலமுறச் செய்கின்றதா அல்லது பலவீனப்படுத்துகின்றதா என்பதைக் கொண்டே விடயங்களை பார்க்க வேண்டும். தமிழ் மக்களை பலமுறச் செய்யும் அனைத்து அரசியல் முயற்சிகளுமே வரவேற்கப்பட வேண்டியவை - ஒரு வேளை அதனால் ஒரு கட்சியோ அல்லது நபர்களோ நன்மை அடைந்தால் கூட, அது பிரச்னைக்குரியதல்ல. அதே வேளை தமிழ் மக்களை அரசியல்ரீதியில் பலவீனமடையச் செய்யும் முயற்சிகளுக்கு எவ்வாறான தமிழ்த் தேசிய முலாமை பூசினால் கூட, அவைகள் தமிழ் மக்களுக்கு அரசியல்ரீதியில் நன்மையானதாக அமையாது.

சூழ்நிலை கருதிய அரசியல் தீர்மானங்களில் எதிரி - துரோகி என்னும் சொற்களுக்கு எவ்வித பெறுமதியும் இருப்பதில்லை. எதிரிகள் அல்லது கடந்தகாலத்தில் எதிர் நிலையிலிருந்தவர்கள் - என்று கருதப்படுபவர்களோடு தேவை கருதி உடன்பாடு செய்து கொள்வதை துரோகம் என்று அழைக்க முற்பட்டால், முதல் துரோகி யார் என்னும் கேள்விக்கான பதிலில் இடறிவிழ வேண்டிவரும். பின்னர் இடறிவிழுந்தவர்களால் எழுந்து கொள்ள முடியாமலும் போகலாம். அரசியலில் சூழ்நிலைதான் விடயமே தவிர, அந்தச் சூழ்நிலையில் எவர் எவருடன் நின்றார் - நிற்கின்றார் என்பது விடயமே அல்ல. அரசியலை அறிவால் அளவிடுபவர்களுக்கு இந்தச் சூத்திரம் நன்றாக புரியும் ஆனால் உணர்வால் அரசியலோடு மல்லுக்கட்டுபவர்கள் தொடர்ந்தும் இடறிவிழும் இடமும் இதுதான்.

இதுவரை வாசித்த விடயங்களிலிருந்து இன்றைய அரசியல் சூழலை வாசிப்போம். இன்று எவ்வாறான அரசியல் நெருக்கடியொன்று தமிழர் அரசியல் சமூகத்தை ஆட்கொண்டிருக்கின்றது? இலங்கையில் ஈழத் தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் உரிமைகள் உண்டு, அந்த அடிப்படையில் அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தி, முன்னோக்கிச் செல்ல வேண்டிய கடப்பாடு இலங்கை அரசாங்கத்திற்கு உண்டு என்று - இதுவரையில் கூறிவந்த இந்தியா இம்முறை அரசியல் யாப்பை அமுல்படுத்தும் கடப்பாட்டை சுட்டிக்காட்டியதோடு, அதன் எல்லையை மட்டுப்படுத்திவிட்டது - ஏன்?

தமிழ் மக்கள் மிகவும் சிறந்த முடிவை எடுத்திருக்கின்றனர் என்று இலங்கைக்கான சீனத் தூதுவர் பாராட்டுகின்றார் ஏன்? ஏனென்றால் இதுவரையில் தமிழ்த் தேசியத்தை பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிவந்த கட்சிகளை மட்டுமே, ஈழத் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக ஆதரித்து வந்திருக்கின்றனர் - குறிப்பாக வடக்கு மாகாண மக்கள் - அதிலும் குறிப்பாக யாழ்ப்பாண குடாநாட்டு மக்கள் இம்முறை தென்னிலங்கை சிங்கள கட்சியான ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியை ஆதரித்திருக்கின்றனர். தமிழ் மக்கள் இனவாதத்தை புறம்தள்ளி விட்டனர் - என்பதே தேசிய மக்கள் சக்தியின் பிரதான சுலோகமாக இருக்கின்றது. அவர்களின் மொழியில் இனவாதம் என்பது, வடக்கு கிழக்கில் தமிழ் மக்களை தனியான தேசிய இனமாக முன்னிறுத்திவரும் கோரிக்கைகள் அனைத்தையும் ஒரு சொல்லுக்குள் அடக் குவதாகும்.

இந்த அடிப்படையில் ஈழத் தமிழ் மக்களுக்கு தனித்துவமான அரசியல் இல்லை - அவர்களுக்கு இருப்பதோ, பொருளாதார பிரச்னைகளும் நிர்வாகச் சிக்கல்களும் மட்டும்தான். இவ்வாறானதொரு பின்னணியில்தான், நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை, தமிழ் கட்சிகள் எவ்வாறு எதிர் கொள்ளப் போகின்றன என்னும் கேள்வி மேலேழுந் திருக்கின்றது. உள்ளூராட்சித் தேர்தலின் அரசியல் முக்கியத்தும் வேறு - தமிழ்த் தேசியம் என்னும் சொல் கொண்டு அதனை நோக்க முடியாது என்பது உண்மை ஆனால் இம்முறை வழமை யான பார்வையிலிருந்து வெளியேற வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டிருக்கின் றது. தேசிய மக்கள் சக்தியின் வெற்றி அவ்வாறான நிர்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்த நிலையில் உள்ளூராட்சித் தேர்தலில் வடக்கு கிழக்கில் - அதாவது, இந்திய-இலங்கை ஒப்பந்தத் தின்படி ஈழத் தமிழ் மக்களின் வரலாற்று வாழ்விடத்தில், ஒரு மக்கள் கூட்டமாக, தமிழ் மக்கள், ஒரு சின்னத்தின் கீழ் அணி திரண்டிருக்கின்றனர் என்னும் செய்தியை வாக்களிப்பின் மூலம் நிரூபித்தால் மட் டுமே, தேசிய மக்கள் சக்தியின் பார்வை தவறு என்பதை நிரூபிக்க முடியும்.

இது நடக்க வேண்டும் என்றால் உள்ளூராட்சித் தேர்தலை எவ்வாறு எதிர் கொள்ள வேண்டும்? எவ்வாறு எதிர் கொண்டால் இந்த அரசியல் செய்தி வெளிப்படும்? தமிழர் உரிமை அரசியலை பிரதிபலிக்கும் அனைத்து கட்சிகளும் ஒரு அணியாக போட்டியிட்டு, அனைத்து வட்டாரங்களையும் கைப்பற்ற வேண்டும். வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் மக்களுக்கான வட்டாங்கள் எவையுமே, தமிழர் உரிமையரசியலுக்கு வெளியில் சிதறக் கூடாது. இது நிகழ வேண்டுமாயின் தேர்தலில் ஒரணியாக நிற்பதற்கும் அப்பால் பொருத்தமான, கல்வியறிவுள்ள, சமுக மட்டத்தில் பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் இல்லாதவர்கள் வேட்பாளர்களாக நிறுத்தப்படவும் வேண்டும். இந்த இடத்திலும் பாரம்பரிய கட்சி மனோபாவத்திலிருந்து விடுபட வேண்டும். இதன் மூலம்தான் தேசிய மக்கள் சக்தியின் சவாலை எதிர்கொள்ள முடியும்.

உள்ளூராட்சித் தேர்தலின் இறுதி முடிவுகளானது, வடக்கு கிழக்கில், ஈழத் தமிழர் அரசியலானது - ஒரு அணி - ஒரு மக்கள் என்னும் செய்தியை நிலைநாட்டுவதாக இருக்க வேண்டும். இது நிகழாது போனால், ஒரு பொல்லாப்பும் இல்லை - எல்லாம் எப்போதோ முடிந்து போன காரியமாகும் - தேசிய மக்கள் சக்தி கூறுவது உண்மை என்பது மீண்டுமொருமுறை நிரூபிக்கப்படும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்க் கட்சிகள்...

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்ப்பாணத்தின் அரசியல் கோட்டையாகயிருந்த பல தொகுதிகளை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியுள்ளது. தமிழ் மக்கள் இவ்வளவு வெற்றியை தருவார்கள் என தேசிய மக்கள் சக்தி கூட எதிர்பார்க்கவில்லை. தென்னிலங்கை அரசியலின் பலவீனங்களே இதற்குக் காரணம்.

ரணில், சஜித் இருவரும் இணைந்து போட்டியிட்டிருந்தால் அநுரகுமார இவ்வளவு பெரிய வெற்றியை பெற்றிருப்பாரா என்பது சந்தேகமே. கோட்டாபய பெரு வெற்றிக்கு பின்னர் அடைந்த பெரும் தோல்வியும் ஊழல்கள் குறித்த பெரும் விரக்தியும் தென்னிலங்கை அரசியல் பலவீனங்களுக்கு காரணம். தேசிய மக்கள் சக்தியினர் தங்களை இடதுசாரிகள் என அடையாளப்படுத்த விரும்பவில்லை.

கிழக்கு மாகாணத்தில் வீட்டுக்கு வெற்றி கிடைத்தது. அம்பாறையில் ஒருவர் வெல்வது சாத்தியமா என்ற கேள்வி காணப்பட்ட நிலையில் அம்பாறையிலும் திருகோணமலையிலும் ஒவ்வொரு ஆசனங்களை கைப்பற்ற முடிந்தது.

வடக்கு மாகாணத்தில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறவில்லை. தமிழ்த் தேசியக் கட்சிகள் தேசிய மக்கள் சக்தியை வெற்றி பெறச் செய்தன. கட்சிகளுக்குள் பிரச்னை, கட்சிகளிடையே பிரச்னை, காலவதியாகிவிட்ட அரசியல்வாதிகள் அரசியல் செய்ததும் ஒரு காரணம்.

சுயேச்சைக் குழுக்கள் மிக அதிகளவில் வாக்குகளைச் சிதறடித்தன. தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்தது பெரும் வெற்றி என்பதை விட அவர்கள் வெல்ல வைக்கப்பட்டார்கள். தமிழ்த் தேசியம் தோற்கடிக்கப்படவில்லை. அது தோற்கவில்லை. தமிழர் பகுதிகளில் சமஷ்டி வேண்டுமா என சர்வஜன வாக்கெடுப்பை நடத்தினால் முடிவு வேறுவிதமானதாக காணப்படும். ஆம் என்றுதான் தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள்.

கோட்டாபய அரசாங்கம் அமைத்த குழுவில் நான் இருந்தேன். ஆனால் நான் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யவில்லை. அந்த குழுவினரின் பல பரிந்துரைகளை நான் ஏற்கவில்லை. கோட்டாபய காலத்தில் முன்மொழியப்பட்ட புதிய அரசியல் அமைப்பில் சமஷ்டி குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

பௌத்த மதத்துக்கு முன்னுரிமை கொடுப்பதை நான் எதிர்த்தேன். மதம் வேறு அரசியல் வேறு. 13ஆவது திருத்தம் என்ற பெயர்ப்பலகையை வைத்துக்கொண்டு எந்த அதிகாரம் இல்லாத ஒன்றை கொண்டு வரமுயன்றார்கள். நான் உடன்படவில்லை. சந்திரிகா குமாரதுங்க கொண்டுவந்த அரசமைப்பு யோசனை முன்னேற்றகரமானது என நான் குறிப்பிடுவேன். ஆனால் அதனை எதிர்த்த வரலாறு ரணில் விக்கிரமசிங்கவும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் உள்ளது.

புதிய அரசமைப்புக்கு தமிழ் மக்கள், தமிழ் கட்சிகள் செல்லவேண்டுமா என்றால் வேண்டாம் என்றே தெரிவிப்பேன். தேசிய மக்கள் சக்தியினர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பது குறித்து தெரிவித்து வந்தார்கள். அதை பேசுவதை இப்போது விட்டுவிட்டார்கள்.

எங்கள் இனப்பிரச்னைக்கு நாங்கள் எதிர்பார்க்கும் தீர்வு வரும்வரை புதிய அரசமைப்பு முயற்சிகளை நாங்கள் ஏற்கக் கூடாது. இனப்பிரச்னைக்கு முன்வைக்கப்படுகின்ற எந்த தீர்வும் 13ஆவது திருத்தத்துக்கு மேலானதாகயிருக்கவேண்டும்.

இந்த அரசாங்கத்திடம் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான பலம் உள்ளது. மூன்றில் இரண்டு உள்ளது. சர்வஜன வாக்கெடுப்புக்குக்கூட இவர்கள் செல்லலாம். ஆனால், அவர்கள் அதனை செய்யமாட்டார்கள் -என்றார். (அ)

## எந்த மதத்தையும்...

மாத்திரமே தாம் கருத்திற் கொண்டு பேசியதாக கூறினார்.

எந்த மதத்தையும் நிந்திக்கும் விதத்தில் செயற்படவில்லை என தம் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் விதமாக அவர் இதனை கூறினார். (அ)

## புலமைப்பரிசில்...

என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், ஆரம்பப் பிரிவு பாடசாலைகள் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையை இலக்காகக் கொண்டதாகவே காணப்படுகிறது. பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் மேலதிக வகுப்பு ஆசிரியர்கள் இந்த புலமைபரிசில் பரீட்சையை இலக்காகக் கொண்டுள்ளார்கள். இதனால் மாணவர்கள் பாரிய அழுத்தங்களுக்கு உள்ளாகுகிறார்கள். இது குறித்து அரசாங்கம் விசேட கவனம் செலுத்தவேண்டும்-என்றார். (அ)

## ஜனநாயக...

ரெலோ அமைப்பின் மன்னார் மாவட்ட அமைப்பாளருமான டானியல் வசந்தன் தலைமையில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை, நானாட்டான் பிரதேச சபை, முசலி பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணம் செலுத்தப்பட்டது. (அ)

## உள்ளூராட்சி...

தேர்தலில் வடக்கு-கிழக்கில் உள்ள அனைத்து சபைகளிலும் போட்டியிட உள்ளது.

யாழ்ப்பாணத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களாக சரவணபவன் மற்றும் சந்திரகுமார் ஆகியோரின் கட்சிகளுடன் இணைந்து போட்டியிட உள்ளோம். ஏனைய இடங்களில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பாக அதன் அங்கத்துவக் கட்சிகள் இணைந்து போட்டியிட உள்ளோம்.

அதற்கான கட்டுப் பணத்தை செலுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். ஒட்டுமொத்தமாக ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு அனைத்து சபைகளிலும் போட்டியிடும்.

மன்னார் பிரதேச சபைக்கான தேர்தல் தொடர்பாக நீதிமன்றத்தில் இடம்பெறும் வழக்கு விசாரணை மீளப் பெற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் அதற்கான தேர்தல் அறிவிக்கப்படும் சந்தர்ப்பம் உள்ளது. எனவே மன்னார் பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிட நாங்கள் தயாராக உள்ளோம்.

ஜனநாகய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் மாத்திரமே ஒரு கூட்டாக இத் தேர்தலில் போட்டியிட உள்ளன. அண்மையில் 9 கட்சிகள் இணைந்து ஒரு கலந்துரையாடல் மத்திரமே முன்னெடுக்கப்பட்டது.எனினும் 9 கட்சிகளும் இணைந்துள்ளோம் என்று தெரிவிக்கவில்லை. 9 கட்சிகளும் இணைந்து கலந்துரையாடலை மாத்திரமே முன்னெடுத்தோம்.

எனினும் இக்கூட்டு யாழ்ப்பாணத்தில் மாத்திரமே அமைய இருக்கின்றது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனின் கட்சி தனித்து போட்டியிட உள்ளது.

ஐங்கரநேசனின் கட்சி தனித்து போட்டியிடுகிறதா? இல்லையா என்று தெரியவில்லை. எனினும் இந்த அணியில் இருந்து விலகி உள்ளனர்-என்றார். (அ)

## விசாரணைகளை...

ஜனாதிபதி செயலகத்தில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அல்ஜசீரா செய்திச் சேவைக்கு வழங்கப்பட்ட நேர்காணல் மற்றும் அதில் முக்கியமாக பேசப்பட்ட பட்டலந்த விவகாரமும் தற்போது நாட்டில் முக்கிய பேசுபொருளாக மாறியுள்ளது.

இதனை அடிப்படையாகக் கொண்டு உரிய விசாரணைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்தி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இலஞ்ச ஊழல் வீண்விரயத்துக்கு எதிரான பிரஜைகள் அமைப்பினால் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் பட்டலந்த சித்திரவதை முகாம் தொடர்பில் வெளியிடப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி ஜனாதிபதி செயலகத்தில் இந்த அமைப்பினால் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இலஞ்ச ஊழல் வீண்விரயத்துக்கு எதிரான பிரஜைகள் அமைப்பின் தலைவர் ஜாமுனி காமந்த துஷார இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதுடன் அவரால் மகஜரும் கையளிக்கப்பட்டது. (அ)

## த. தே. முன்னணி...

இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் அனுப்பியுள்ள விளக்கக் குறிப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தையும் தங்களுடன் இணைத்துக்கொண்டு போட்டியிடுவது தொடர்பாக எம்முடன் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி , இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி , தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் தலைவர்கள் உத்தியோகபூர்வமாக இதுவரையில் பேசியுள்ளனர். வேறு சில கட்சிகளும் குழுக்களும் உத்தியோக பூர்வமாக இல்லாமலும் பேசியுள்ளன. ஆனாலும் , இவை எவையும் இரகசியமான முறையில் இடம்பெறவில்லை - முடிவுகள் எவையும் எட்டப்படவுமில்லை.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் இந்த உள்ளூராட்சித் தேர்தலில் தனது இருப்பு என்பதைவிடவும் தமிழ்த் தேசியம் தோற்றுவிடக்கூடாது என்பதில் கூடுதல் கவனம் செலுத்திவருகிறது. இதற்கமைவாக, தென்னிலங்கைக் கட்சிகளினதும் அவற்றின் சகபாடிகளினதும் ஆதிக்கத்தை எவ்வாறு தவிர்ப்பது என்பது தொடர்பாக அதிக கவனம் செலுத்திவருகிறது. இவற்றின் அடிப்படையிலேயே உள்ளூராட்சித் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பான முடிவுகளை தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் எடுத்து விரைவில் மக்களுக்கு அறியத்தரும் - என்றுள்ளது. (ஐ)

## அர்ச்சுனா...

கள் தொடர்பிலும் தெளிவாகச் சட்டங்கள் வகுக்கப்பட்ட ஒரே மார்க்கம் இஸ்லாம் என அவர் சுட்டிக்காட்டினார்.

நேற்றைய குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர்-

தமது சமூகத்தினரின் விடயத்தில் தேவையில்லாமல் மூக்கை நுழைப்பதை விடுத்து தேச வழமைச் சட்டத்தில் உள்ள பிரச்னைகளில் மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்குமாறு கூறினார்.

தமது மார்க்கம் மற்றும் இஸ்லாமிய பெண் பிள்ளைகள் தொடர்பில் எவ்வாறான தீர்மானங்களை எடுக்க வேண்டும் என தமக்குத் தெரியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சமூக வலைத்தளங்களில் புகழைத் தேடுவதற்காக அர்ச்சுனா இஸ்லாமிய சமூகத்தைக் கொச்சைப்படுத்துவதாக நளீம் சாடினார். (அ)

## தபால் தொழிற்...

பதவியில் ஆட்சேர்ப்பு, நியமனம், பதவி உயர்வு, சம்பள உயர்வு உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகளை முன்னிறுத்தி பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

இந்த விடயங்கள் தொடர்பில் தபால் மா அதிபருடன் கலந்துரையாடியதாகவும் அங்கிருந்து எந்தவொரு சாதகமான முடிவையும் எடுக்கத் தவறியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## ரணில் உள்ளிட்...

மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு வெற்றிடங்கள் இருக்கும்போது நீதிபதிகளை நியமிக்காததன் மூலம் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்குமாறு கோரி, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட சிலருக்கு எதிராக குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனக் டி சில்வா, பிரியந்த பெர்னாண்டோ மற்றும் மேனகா விஜயசுந்தர ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர் குழாம் முன்னிலையில் இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நீதியரசர் திருமதி மேனகா விஜயசுந்தர இந்த விசாரணையில் இருந்து விலகிக் கொள்வதால், அவர் இல்லாத நீதியரசர் குழு முன் இந்த மனுவை மே 9 ஆம் திகதி பரிசீலனைக்கு அழைக்க இதன் போது உத்தரவிடப்பட்டது.

ஜனாதிபதியின் சட்டத்தரணி சேனக வல்கம்பயவினால் இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் வரை மேன்முறையீட்டு நீதிமன்றில் 05 வெற்றிடங்கள் காணப்படுவதாக மனுதாரர் ஜனாதிபதி சட்டத்தரணி மனுவில் சுட்டிக் காட்டியுள்ளார்.

அந்த நீதித்துறை வெற்றிடங்களை அப்போதைய ஜனாதிபதி நிரப்பத் தவறியதன் மூலம் தனது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்குமாறு மனுதாரர் கோரியுள்ளார். (அ)

## அரச வைத்திய...

நெருங்கிய தொடர்புடைய துறைகளாக உள்ளன. ஆகையால் அவற்றுக்கு மாற்று வழிகள் எதுவும் இல்லை.

இத்துறைகளில் கடமையாற்றுபவர்களின் பொறுப்புணர்வு, ஒருங்கிணைப்பு மற்றும் மேலாண்மை ஆகியவை அத்துறைகளில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. சுகாதாரம் மற்றும் மருந்துத் துறைகளில் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு செயற்பாடு தொடர்பிலும் தொடர்ச்சியாக கண்காணிப்பதுடன், அதன் விளைவுகள் தொடர்பில் ஆராய்வதும் அவசியமானதாகும்.

இதன் மூலம் மருந்து விநியோகச் சங்கிலியை தொடர்ச்சியாக பராமரிக்க முடியும். சுகாதாரத் துறையில் பணிபுரியும் அனைவரும் பொறுப்புடன் செயல்பட வேண்டும். சில சூழ்நிலைகளில் சவலான நிலைமைகளையும் நாம் சந்திக்க நேரிடலாம். எனினும் பொது மக்களுக்கு உயர்தரமான சுகாதார சேவையை வழங்க வேண்டும், என்ற எமது முதன்மையான நோக்கத்தை நிறைவேற்றுவதில் எவ்வாறான சவால்கள் எழுந்தாலும், அவற்றுக்கு சரியாகவும் நேர்மையாகவும் முகம் கொடுப்பதன் மூலம் வெற்றிகரமாக முறியடிக்க முடியும். மருந்துத் துறையில் நிலவிவரும் பல பிரச்னைகளுக்கு தீர்வுகளை வழங்க தற்போதைய அரசாங்கம் துரித நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன.

அத்தோடு எதிர்வரும் காலங்களில் அரச வைத்தியசாலைகளுக்கு எவ்வித தட்டுப்பாடுமின்றி மருந்துகளை தொடர்ச்சியாக வழங்க சுகாதார அமைச்சும் உரிய நடவடிக்கை எடுத்துள்ளது-என்றார்.(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ரிட் மனுவை தாக்கல் செய்தார் தேசபந்து!

கொழும்பு, மார்ச் 11

2023 ஆம் ஆண்டு மாத்தறை, வெலிகம பகுதியில் ஹோட்டல் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் தன்னைக் கைது செய்யுமாறு நீதிமன்றினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை இரத்து செய்யுமாறு கோரி முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், தனது சட்டத்தரணி ஊடாக சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றில் ரிட் மனு தாக்கல் செய்துள்ளார்.

இந்த ரிட் மனு சிவில் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதவான் மடுல்ல முன்னிலையில் நேற்று திங்கட்கிழமை பரிசீலிக்கப்பட்டது.

இதன்போது, சிவில் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதவான் மடுல்ல, தேசபந்து தென்னக்கோனின் ரிட் மனு எதிர்வரும் 12 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என உத்தரவிட்டுள்ளார். (அ)

# கல்வித்துறையை மேம்படுத்த பெரும் மாற்றங்கள் வேண்டும்

## குகதாசன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 11

**கல்வித்துறையை மேம்படுத்தவேண்டுமாயின் பாடத்திட்டம், கற்பித்தல் முறைமை, ஆசிரியர் பணிக்கான ஆட்சேர்ப்பு ஆகியவற்றில் பாரிய மாற்றங்கள் செய்யப்படவேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.**

நிதி ஒதுக்கீடு, ஆளணி மற்றும் பௌதீக வள பற்றாக்குறைக்குத் தீர்வு காணப்படவேண்டும் எனவும் நேற்றைய பாராளுமன்ற குழுநிலை விவாதத்தில் குகதாசன் வலியுறுத்தினார்.

உயர்தரப் பரீட்சையில் தேர்ச்சி பெற்று பல்கலைக்கு தகுதி பெற்றிருந்தும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மாணவர்கள் நிர்க்கதியாகியுள்ளதாகவும் அவர் சபையில் சுட்டிக்காட்டினார்.



குறிப்பிட்ட தரப்பினருக்கு வழிகாட்டவேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் கல்விமுறை தொழிற் சந்தையுடன் இணைந்ததாக இல்லை, இதன் காரணமாகப் பட்டதாரிகள் தொழிற் சந்தையில் வேலை வாய்ப்பை பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளதாக குகதாசன் கூறினார்.

எனவே நாட்டினுடைய பாடத்திட்டங்களை தொழிற்சந்தையுடன் இணைந்ததாக மாற்றியமைக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (அ)

# தென்னக்கோனைக் கைது செய்ய ஆறு பொலிஸ் குழுக்கள் களத்தில்!

கொழும்பு, மார்ச் 11

முன்னாள் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னக்கோனை கைது செய்வதற்காக 06 பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

2023 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி மாத்தறை பெலேன பகுதியிலுள்ள ஹோட்டலொன்றுக்கு முன்பாக இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு அமைய முன்னாள் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னக்கோனை கைது செய்யுமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தேசபந்து தென்னக்கோனுக்கு வெளிநாட்டு பயணத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது. (அ)

# தென்னியங்குளம் பாடசாலையின் வாயிலை மூடி நேற்று போராட்டம்!



முல்லைத்தீவு, மார்ச் 11

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட தென்னியன்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு கோரி பெற்றோர் பாடசாலை வாயிலை மூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலையில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு கோரி பாடசாலை வாயில் கதவை மூடி காலை 7.30 மணி தொடக்கம் பெற்றோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்துக்கு வந்த மல்லாவி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு மாணவர்களை பாடசாலை வளாகத்துக்குள் அனுப்பியபோதும் அதிபர் ஆசிரியர்களை உள்ளே செல்ல போராட்டக்காரர்கள் அனுமதிக்கவில்லை.

குறித்த இடத்துக்கு அதிகாரிகள் வரும்வரை தாம் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக தெரிவித்து பெற்றோர் போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# மன்னார், பூநகரி, தெஹியத்தகண்டி சபைகளுக்கு மார்ச் 24 ஆம் திகதி முதல் வேட்புமனுக்கள் ஏற்பு

கொழும்பு, மார்ச் 11

மன்னார், பூநகரி மற்றும் தெஹியத்தகண்டிய பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்கள் மார்ச் 24 ஆம் திகதி முதல் மார்ச் 27 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நேற்று முதல் மார்ச் 26 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை கட்டுப்பணம் செலுத்தலாம் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# செவ்வந்தி இந்தியாவுக்கு தப்பவில்லை!

## பொலிஸ் பேச்சாளர்

கொழும்பு, மார்ச் 11

கணேமுல்ல சஞ்சீவவின் கொலையின் முக்கிய சந்தேக நபராக அடையாளம் காணப்பட்ட இஷாரா செவ்வந்தி இந்தியாவுக்கு தப்பிச் செல்லவில்லை என்று நம்பப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மானதுங்க தெரிவித்தார்.

அவர் இந்தியாவுக்கு தப்பிச் சென்றுவிட்டதாக பரவி வரும் வதந்திகள் குறித்து கேட்டபோது அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த படுகொலை நடந்த சில மணி நேரங்களுக்குள் அவர் நாட்டை விட்டு வெளியேறுவதற்கான அனைத்து சாத்தியமான வழிகளும் அடையாளம் காணப்பட்டு, பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றி அடைக்கப்பட்டன.

அத்தகைய சூழ்நிலையில், அந்த நபர் நாட்டை விட்டு வெளியேறுவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு. புலனாய்வுக் குழுக்கள் தங்களுக்குக் கிடைக்கும் ஒவ்வொரு தகவலையும் ஆராய்ந்து வருகின்றன.

இதுபோன்ற சம்பவம் நிகழும்போது, பல்வேறு வதந்திகள் பரப்பப்படுகின்றன. விசாரணைகளைத் திசைதிருப்ப குற்றவாளிகள் இதுபோன்ற தகவல்களை வெளியிடுவது சாத்தியமாகும்.

இந்நிலையில், சந்தேகநபரை கைது செய்ய புலனாய்வுக் குழுக்கள் இன்னும் தீவிரமாக செயற்படுகின்றன- என்றார். (அ)

# யாழ்.கல்வியற் கல்லூரி குறித்து கவலை வெளியிட்டார் பிரதமர்!

கொழும்பு, மார்ச் 11

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் நிலையைப் பார்க்கும் போது கவலையளிப்பதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெறும் வரவு-செலவுத்திட்டத்தின் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது ஆசிரியர் சேவையில் இருக்கின்ற ஆசிரியர் வளத்துக்கு அப்பாற்பட்டு கல்வியற் கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் உள்ள பீடங்கள் ஊடாக பயிற்சி பெறுகின்ற ஆசிரியர்கள் தொடர்பாக நாங்கள் கவனம் செலுத்தியிருக்கின்றோம்.

கல்வியற் கல்லூரிகள் இருக்கின்ற நிலையைப் பார்க்கும் போது கவலையாக இருக்கின்றது. பொலனறுவை, யாழ்ப்பாணம் போன்ற கல்வியற் கல்லூரிகளைப் பார்வையிடச் சென்றேன்.

எதிர்காலத்தில் ஆசிரியர்களாக வரக்கூடிய அங்கிருக்கின்ற மாணவர்கள் எந்த வசதியும் இல்லாமல் இருக்கின்றனர். சரியான விடுதி வசதிகள் இல்லை, குடிநீர் வசதிகள் இல்லை.

பாடசாலைகளில் திறன் வகுப்பறைகள் பற்றிக் கதைக்கின்றோம். படிப்பிக்கக் கூடிய ஆசிரியர்களுக்கு இன்னமும் கரும்பலகை மாத்திரமே இருக்கின்றது. சரியான மின்சார வசதிகள் இல்லை, உட்கட்டுமான வசதிகள் இல்லை.

இந்த நிலையில் பாடசாலைகளுக்காக 11,000 மில்லியனை இம்முறை வரவு-செலவுத்திட்டத்தில் ஒதுக்கியுள்ளோம்.-என்றார். (அ)

# பாராளுமன்றத்துக்குள் நட்புறவை வளர்ப்போம்

## ரோஹித அபேகுணவர்தன அழைப்பு

கொழும்பு, மார்ச் 11

பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் நட்புறவை வளர்ப்பதன் மூலம் கல்விக்கான ஒரு நல்ல முன்மாதிரியை ஏற்படுத்துவோம் என பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.

கல்வியமைச்சு மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். கல்வி அமைச்சராகவும் மூன்றாவது பெண் பிரதமராகவும் ஹரிணி அமரசூரிய இருக்கிறார். மிகவும் மகிழ்ச்சி. 20 பேர் அந்தப் பக்கம் பெண் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். எங்கள் பக்கம் இரண்டு பெண் உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.பாராளுமன்றத்தில் கல்விக்காக ஒரு நல்ல முன்மாதிரியை நாங்கள் வழங்குவோம். பாராளுமன்றத்தில் 224 பேர் இருக்கிறோம். நாங்கள் ஐந்து வருடங்கள் இங்கே இருக்கப் போகிறோம். நாங்கள் நட்புறவை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

பிள்ளைகளுக்கு ஒரு நல்ல முன்மாதிரியை வழங்க வேண்டும். முன்மாதிரியை வழங்கிய ஒரு அரசாங்கமாக உங்களுடைய அரசாங்கம் இருக்கிறது.எங்கள் மத்தியில் முதலில் புரிதல்களை ஏற்படுத்திக் கொள்வோம். இங்கு இருக்கின்ற பெண் உறுப்பினர்களோடு பேசுவதற்கு நான் மிகவும் மகிழ்ச்சியுடன் தயாராக இருக்கிறேன்-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.03.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org